Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 29 திங்கட்கிழமை (15.12.2014) பக்கங்கள் 20 ஓசை – 076

### யாழ்.தேர்தல் மாவட்டத்திலுள்ள

## வாக்களிப்பு பிரிவுகளுக்கான பிரசார முகவர்கள் நியமனம்



(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ்.தேர்தல் மாவட்டத்திலுள்ள வாக்களிப்பு பிரிவுகளுக்கான பிரசார முகவர்களுக்கான நியமனக் கடிதங்களை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார்.

யாழ்.தேர்தல் மாவட்டத்தின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முகவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் வைத்து இந்த

19 ஆம் பக்கம் பார்க்க...

## தபால் மூல வாக்களிப்பிற்கான 50 ஆயிரம் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக அரச ஊழியர்கள் செய்திருந்த விண்ணப்பங்களில் சுமார் 50 ஆயிரம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியில்லாதவர்கள் அனுப்பிய விண்ணப்பங்கள், சரியான விபரங்கள் உள்ளடக்கப்படாத விண்ணப்பங்கள் இவ்வாறு நிராகரிக் கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பணிகளில் ஈடுபடத்

19 ஆம் பக்கம் பார்க்க...

## 33 பேர் சாட்சியமளிப்பு

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழு விசாரணையில் அழைக்

19 ஆம் பக்கம் பார்க்க...

## புலிகள் மீதான தடை தொடர்ந்தும் அமுலில்

### பிரிட்டன் அறிவிப்பு

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என பிரித்தானியா அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலிலிருந்து அண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியிருந்தது. ஐரோப்பிய நீதிமன்றின் தீர்மானத்திற்கு அமையவே இவ்வாறு தடைப் பட்டியலிலிருந்து

19 ஆம் பக்கம் பார்க்க...

# அரசிலிருந்து வெளியேறுவதா? முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை

## ஊடக செய்தியை மறுக்கும் முஸ்லிம் காங்கிரஸ்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறுவது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை. அதே நேரம் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்கான எந்தத் தீர்மானமும் எட்டப்படவில்லை. இவ்வாறு கூட்டாகத் தெரிவித்துள்ளனர் அக்கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி. ஹசன் அலி மற்றும் கட்சியின் சிரேஷ்ட பிரதித்தலைவர் ஏ.எல். அப்துல் மஜீத் ஆகியோர்.

சில ஊடகங்களில் மு.கா. அரசிலிருந்து வெளியேறி, மைத்திரிபாலவை ஆதரிக்கும் என்று

19 ஆம் பக்கம் பார்க்க...

## தேர்தல் விஞ்ஞாபனத்தின் பின்னரே யாருக்கு ஆதரவென முடிவு

### என்கிறார் மாவை



இரண்டு பிரதான வேட்பாளர்களினதும் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவந்து பின்னரே யாரை ஆதரிப்பதென முடிவெடுக்கப்படுமென மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டம்

19 ஆம் பக்கம் பார்க்க...

## கிணற்றில் தவறி வீழ்ந்து 8 வயதுச் சிறுவன் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

எட்டு வயதுச் சிறுவன் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

நுணாவில் பகுதியில் உள்ள வீட்டுக் கிணறு ஒன்றிலேயே இச்சிறுவன் வீழ்ந்துள்ளான்.

இராஜகோபால் டங்கின் ஆகாஷ் (வயது-8) என்ற நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலய தரம் 3 மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

தாயார் உரும்பிராயில் வசிக்கின்ற நிலையில், சிறு வயது

19 ஆம் பக்கம் பார்க்க...

## அரச உதவிகள் வேண்டாம்; கணவரை மீட்டுத் தாருங்கள்


### மனைவி மன்றாட்டம்

தந்திரிமலையில் நிலை கொண்டிருந்த இராணுவப் புலனாய்வாளர்களே எனது கணவனைக் கடத்திச் சென்றனர். எனவே அரச உதவிகளைப் பெற்றுத் தருவதை விட எனது கணவரை மீட்டுத்தாருங்கள். இவ்வாறு காணாமற் போனோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் கோரிக்கை விடுத்துள்ளார் பெண்ணொருவர்.

காணாமற்போனோர் தொடர்பான விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது முதலாவதாகச் சாட்சியமளித்த பெண், எனது கணவர் 2008.03.06 ஆம் திகதி அன்று கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளார். இன்று வரை அவர் குறித்த எந்தத் தகவலும் எமக்குக் கிடைக்கவில்லை.

குறித்த தினத்தில் எனது கணவரும்,

19 ஆம் பக்கம் பார்க்க...



# வாள்வெட்டில் முதியவர் படுகாயம்

(சாவகச்சேரி)

திருடும் நோக்கில் வீடுபுகுந்தவர்கள் வாளால் வெட்டியதில் முதியவர் ஒருவர் கைவிரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் சாவக்ச்சேரி, நுணாவில் மேற்கு விளவேலி பகுதியில் நேற்று இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் இளையதம்பி சண்முகம் (வயது - 70) என்பவரே கையில் விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கணவனும் மனைவியுமாக வீட்டில் தனித்திருந்த வேளை இவர்களது வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் முதியவரை வாளால் வெட்டியுள்ளனர். அவர்கள் சத்தமிடவே அயலவர்கள் விழித்துக்கொண்டதால் திருடர்கள் தப்பியோடிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | நிகழ்ச்சி |
|---|---|
| AM 05.00 | ஆலய தரிசனம் (பக்தி பாடல்கள்) |
| AM 07.00 | காலை கதிர் |
| AM 08.00 | நாளிதழ் நேரம் |
| AM 09.00 | SMS Time (Live) |
| AM 09.58 | காலை செய்தி |
| AM 10.00 | HELLO DD |
| AM 10.30 | புதுயுகம் |
| AM 11.00 | சிரிக்க சிரிக்க |
| AM 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 12.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | நகைச்சுவை திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்தி |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 07.30 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# எமது இனத்துக்கான தீர்வைப் பெற இணக்கமும், கூட்டுமுயற்சியும் அவசியம்

## கே.வி.குகேந்திரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்தகால தவறுகளை எண்ணிக்கொண்டிருப்பதாலும் பழிவாங்கும் எண்ணங்களைக் கொண்டிருப்பதாலும் எமது சமூக வளர்ச்சியும் எமக்கான தீர்வுகளும் ஒருபோதும் கிடைத்துவிடப்போவதில்லை. எமது தேவைகள் எதுவானாலும் மத்தியில் ஆட்சி செய்பவர்களுடன் இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதனூடாகத்தான் பெற்றுக்கொள்ள முடியும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமாகிய கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை தொகுதிக்கான இளைஞர் மற்றும் மாதர் அணி அங்குரார்ப்பண நிகழ்வு பிரதேசசபை உபதவிசாளர் அல்பிரேட் தலைமையில் ஊர்காவற்றுறை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே வி.கே. ஜெகன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தீவகப்பகுதி என்பது எமது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைப் பொறுத்தளவில் பிறப்பு, வளர்ச்சி, கட்டுமானம் என அனைத்தையும் உருவாக்கித் தந்த பகுதியாகவே எண்ணுகின்றோம். அதனால்தான் இன்று வரை இப்பகுதியை அனைத்து வகையிலும் துரிதகதியில் மேம்படுத்தி வருகின்றோம். இங்கு வாழும் ஒவ்வொருவரும் எமது உறவுகளாகவே எண்ணுகின்றோம்.

அழிந்துபோன எமது இனத்திற்கு இன்று சரியான வழிகாட்டியாக இருந்து மக்களை வழிநடத்தும் சக்தியை கொண்டிருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே.

அவரது அரவணைப்பும் பார்வையும் மக்கள்மீது விழுவதனால்தான் இன்று நாம் தலை நிமிர்ந்து வாழமுடிகின்றது.

எமது மக்களின் வழிகாட்டியாக இருக்கும் அமைச்சருக்கு அரசியல் பலத்தை முழுமையாக மக்கள் கொடுக்காதவரை இயல்பான வாழ்வியலை பெற்றுக்கொள்வதென்பது பகல் கனவாகவே இருக்கும்.

இன்று எங்கள் முன்னிருக்கும் இளைஞர் மற்றும் மாதர் அமைப்புகள் என்பது வெறுமனே கண்துடைப்புக்காக உருவாக்கப்பட்டிருக்கும் அமைப்பாக இருக்கப்போவதில்லை. மக்களுக்கும் எமக்கும் இடையிலான தொடர்பாடல் கருவியாகவே உங்களை உருவாக்க முனைகின்றோம்.

இந்தப் பகுதியைப் பொறுத்தவரை பிரதேச சபைத் தவிசாளராக இருப்பது எமது கட்சியைச் சார்ந்தவராக இருப்பதனால் பலவகையான உதவிகளை இப்பிரதேசம் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

தமிழ் மக்கள் உயிரை முதலீடாக வைத்து நடத்திய ஆயுதப் போராட்டம் அறிவாயுதம் என்னும் பலம் இன்மையால் ஒட்டுமொத்தமாகவும் அழிக்கப்பட்டுவிட்டது வரலாறு. தமிழர்களிடமிருந்த அசுரபலம் கொண்ட ஆயுத பலத்தால் எட்டமுடியாத இலக்கை வெற்றுப்பேச்சுக்களால் பெற்றுக்கொள்ள முடியுமா?

இணக்கமும் கூட்டுமுயற்சியும் இருந்தால்தான் இனிவரும் காலங்களில் எமது இனத்திற்கான எந்தவொரு தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியும். இதுவே நடைமுறைக்குச் சாத்தியமான வழியுமாகும் என்றார்.

இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் ஜெயக்காந்தன், உப தவிசாளர் அல்பிரெட், தொழிற்சங்கத் தலைவர் புவி ஆகியோருடன் நூற்றுக்கு மேற்பட்ட அப்பகுதி இளைஞர், யுவதிகளும் பங்குபற்றினர்.

# நுணாவிலில் விபத்து; பொலிஸ் உத்தியோகத்தர் காயம்

(சாவகச்சேரி)

ஏ-9 வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில், சாவகச்சேரி பொலிஸ உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

டபிள்யு.ஏ.பியந்த (வயது - 45) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே படுகா.இயமடைந்துள்ளார். சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின், நீதிமன்றத்துக்கான கடமைகளை செய்யும் இந்த பொலிஸ் உத்தியோகத்தர், நேற்றுக் காலை நீதவானின் வாசஸ்தலத்துக்குச் சென்று மீண்டும் மோட்டார் சைக்கிளில் பொலிஸ் நிலையத்துக்கு திரும்பிக் கொண்டிருக்கும் போது, பின்னால் வந்துகொண்டிருந்த பிக்கப் வாகனம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வைத்து இவரை மோதியுள்ளது.

தலையில் கடுமையான பாதிப்புக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர், முதலில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். மோதிய வாகன சாரதியை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# புங்குடுதீவில் இளைஞர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அலரி விதை உட்கொண்ட இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தினைச் சேர்ந்த சிவானந்தன் செந்தூரன் (வயது - 29) என்ற இளைஞனே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த வெள்ளியன்று விரக்தியடைந்திருந்த மேற்படி இளைஞன் மதுபோதையில் அலரிவிதையினை மாலை 5 மணியளவில் உட்கொண்டுள்ளார்.

இச்சம்பவம் உறவினர்களுக்குத் தெரியவரவே உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த சனியன்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறைப் பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொணடனர். (21,பா)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2589 திகதி 13-12-2014

ஆங்கில எழுத்து: I

வெற்றி எண்கள் 03 25 29 51

போனஸ் இல: 34

ஜக்பொட் பரிசு ரூ.22,783,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 201356 | 20/- | 4,027,120/- |
| 2 இல | 14365 | 100/- | 1,436,500/- |
| 3 இல | 315 | 1,000/- | 315,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8006 | 40/- | 320,240/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 566 | 1,000/- | 566,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 07 | 10,000/- | 70,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 22,783,900- | - |
| 1 இல + போனஸ் இல | 9565 | 100/- | 956,500/- |
| 2 இல + போனஸ் இல | 440 | 500/- | 220,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 373 | 200/- | 74,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 19 | 1,500/- | 28,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 235019 | | 9,614,460/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.12.17 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 23,332,500/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3919)



## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3589)


# தனக்குத்தானே தீ மூட்டிய குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் மண்ணெண்ணெய் ஊற்றி தனக்குத்தானே தீமூட்டிய குடும்பஸ்தர் ஒருவர் எரிகாயங்களுக்கு இலக்காகிய நிலையில் நேற்றுபிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலையின அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டி வாவியடிப்பகுதியைச் சேர்ந்த சதாசிவம் - ரவீந்திரன் (வயது- 41) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குடும்பத்தகராறு காரணமாக மதுபோதையில் வீட்டுக்கதவினை பூட்டிவிட்டு இவர் தனது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீயைப் பற்றவைத்ததன் காரணமாகவே எரிகாயங்களுக்குள்ளாகியதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

# சங்கானை பிரதேசத்திற்கு விரைவில் நவீன மீன்சந்தை

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு பிரதேச சபையின் கீழ் சங்கானை உப அலுவலக பிரதேசத்திற்கு விரைவில் நவீன தரம் கொண்ட மீன் சந்தை 2015 இல் அமையபெற்றுத்தரப்படும்.

மீனவர்கள், மக்கள் மற்றும் வர்த்தகர்கள் போக்குவரத்து செய்யக் கூடிய அளவிற்கு தரம் வாய்ந்த கொங்கிறீட் வீதியும் மீன்சந்தைக்கு அமைத்து தரப்படும் என வலி. மேற்கு பிரதேச சபையின் எதிர்கட்சி தலைவர் சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) தெரிவித்துள்ளார்.

சங்கனை மீன்சந்தையை உடன் புனரமைத்தத் தாருங்கள் எனும் மீனவரின் கோரிக்கை தொடர்பாக எதிர்கட்சிதலைவர்சி.பாலகிருஷ்ணன் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுள்ள மீன்சந்தை நகர அபிவிருத்திக்கும் - சூழலுக்கு பொருத்தமில்லாத இடத்தில் இதுவரைகாலமும் இயங்கி வந்தமை தாங்கள் அறிந்ததே.

இச்செயற்பாட்டிற்கு வலு கொடுத்து உரமூட்டும் வகையில், சங்கானை பட்டின அபிவிருத்தி சபையின் செயலாளர் கே.குணசிறி மற்றும் சங்கானை பிரபல வர்த்தகர் குணசேகரம் ஆகியோர் உரிய காலத்தில் பயனுறுதி தன்மை வாய்ந்த 71/2 பரப்பு காணியை இலவசமாக எமக்கு வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து இரண்டுகோடியே ஒரு இலச்சம் ரூபா செலவில் மீன்சந்தைக்கான உட்பட்டுமான அபிவிருத்தி முன்னெடுத்து செயற்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஆறுமாதங்களில் 2015 வலி.மேற்கு மக்கள் பயன்பட கூடியவகையில் சந்தை மக்களுக்கு கிடைக்கும்.

அதுவரையில் மீனவர்கள் பொறுமை காக்கவேண்டும் மேலும் சங்கானை மீன் சந்தை அபிவிருத்திக்கு எமது சபையின் ஒரு சில உறுப்பினர்களைத் தவிர ஏனையோர் முழுமையாக கைகொடுத்து உதவி வருகின்றனர்.

எதிர்காலத்தில் சங்கானை பிரதேசம் நகர திட்டத்திற்குள் உள்வாங்க கூடிய அளவிற்கு பல்வேறு உட்கட்டுமானங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

2015-2016 இல் நவீன தரம் கொண்ட வர்த்தக கடை தொகுதியுடன் கூடிய மரக்கறி சந்தை அமைத்து தருவதற்கும் சபையுடன் கூடி நடவடிக்கை எடுத்துள்ளேன் என ஜீவன் மேலும் தெரிவித்தார். (92)

# கரணவாய் உப்புவெளிவீதி புனரமைப்பு எப்போது?



(கரணவாய்)

கரணவாய் தெற்கு ஜே/350 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மூத்த விநாயகர் கோவிலிலிருந்து உப்பு வெளிக்குச் செல்லும் பிரதான வீதி மிகமோசமான நிலையில் சேதமடைந்துள்ளதாக அப்பிரதேச பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதி குண்டும் குழியுமாக உள்ளதுடன் மழை காலங்களில் வெள்ள நீர் தேங்கி போக்குவரத்துக்கு உதவாத நிலையில் காணப் படுவதாகவும் இவ்வீதி புனரமைப்பு தொடர்பில் உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தியும் இதுவரை அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறித்த வீதியால் நாளாந்தம் பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள், விவசாயிகள் எனப் பலர் பயணம் செய்கின்ற நிலையில் இவ் வீதியை புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# கவிதைப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

ஈழத்து கவிஞர் முருகு இரத்தினம் ஞாபகார்தமாக புதுக்கவி இணையத்தளம் நடாத்திய கவிதைப்போட்டியின் உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியாகியுள்ளன. இக் கவிதைப் போட்டியில் முதலாம் இடம் வானதி செங்கதிர்செல்வன். (யாழ்இந்து மகளிர் கல்லூரி) இரண்டாம் இடம் - கயாலினி விஜயகுமார். (யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) மூன்றாம் இடம் - விதுஷா வாசுதேவன் (யாழ். மகாஜனக் கல்லூரி).

ஆறுதல் பரிசில்கள் - அநளிணாஷிணி (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ர.ஷாமிலன் - (யா/புனித பரியோவான் கல்லூரி) ஆகியோர் வெற்றி பெற்றுள்ளார்கள். இவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் கவிநயம் - 2015 விழாவின்போது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (63)

# கைப்பணிக்கண்காட்சி

வவுனியா மாவட்ட செயலகத்தின் பெண்கள் பிரிவின் ஏற்பாட்டில், கிராம மட்டங்களிலுள்ள பெண்கள் அமைப்புகளினால் உருவாக்கப்பட்ட கைப்பணிப்பொருட்களை காட்சிப் படுத்தும் நிகழ்வு வவுனியா காமினி மகாவித்தியாலத்தில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

சமூக மட்டத்தில பெண்களின் கைப்பணித் தொழிலை ஊக்குவிக்கும் முகமாக, கைவண்ணத்தில் செய்யப் பட்ட உணவுப்பொருட்கள், ஆடைகள், அழகு சாதனப்பொருட்கள், மற்றும் பனை வேலை பொருட்கள் இதன் போது, காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. இந்நிகழ்வில், வவுனியா மாவட்ட மேலதிக் அரசாங்க அதிபர் திருமதி ச.மோகநாதன், வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# ஆட்சியை மாத்தினால் நமக்கென்ன ஆகுமெண்டு விளக்கிச் சொல்ல வேண்டாமோ...

வடபுலத்தான் எழுதுவது...

நமக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை. எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேணும். இப்பிடித்தான் தமிழாக்கள் யோசிக்கினம்.

அதிலயும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் உதயன் பேப்பரும் இப்பிடித்தான் யோசிக்கிறதைக் காணக்கூடியதாக இருக்கு.

இல்லையெண்டால் நடக்கப்போற ஜனாதிபதித் தேர்தலில அவசரப்பட்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்ரை ஆட்கள் ஆளாளுக்கு அபிப்பிராயம் சொல்லிக்கொண்டிருப்பினமா?

கடந்த கிழமை கிளிநொச்சியில நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அடுத்த தடவை நடக்கிற கூட்டம் வித்தியாசமாகத்தானிருக்கும். அப்ப நீங்கள் இணைத்தலைவராக இருக்கிறியளோ தெரியாது எண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைப் பார்த்து முதலமைச்சர் விக்கினேஸ்வரன் சொல்லியிருக்கிறார் என்று கேள்வி.

ஆட்சி மாற்றத்தையே தமிழர்கள் விரும்புகிறார்கள் என்று உதயன் பத்திரிகை தலைப்புச் செய்தி எழுதியிருக்கு.

இந்த மாதிரித்தான் அநேகமான தமிழ் இணையத்தளங்களும் எழுதிக் கொண்டிருக்கின்றன.

பெரும்பாலான புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் கருத்துகளும் விருப்பங்களும் கூட இப்பிடித்தானிருக்கு.

மாவை கூட மைத்திரிக்குத்தான் தமிரசுக்கட்சியின்ரை ஆதரவிருக்கும் என்று சொல்லியிருக்கிறார்.

சம்பந்தன் மட்டும் இன்னும் வாய் திறக்கேல்ல.

மற்றும்படி தங்கட மூக்கை உடைக்கிற காரியத்தைத்தான் எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கினம்.

ஏன், மகிந்தரை வீட்டுக்கு அனுப்பத்தானே வேணும்? வீட்டுக்கு மட்டுமில்லை தூக்குக்கே அனுப்ப வேணும் என்று யோசிக்கிற – விரும்புகிற ஆட்களும் இருக்கினம்.

ஆனால், மகிந்தரை அனுப்பினால், அந்த இடத்துக்கு வரப்போகிற ஆள் ஆர்?

மைத்திரிதானே.

மைத்திரி எப்பிடியான ஆள்?

இதுவரையிலயும் எங்க இருந்தவர்? எப்பிடி இருந்தவர்? என்ன செய்து கொண்டிருந்தவர்?

மகிந்தரோட வலது கையாக இருந்தவர். முன்னர் சரத் பொன்சேகா இருந்ததைப்போலத்தான் மைத்திரியும் இருந்தவர்.

சரத்துக்கும் மகிந்தருக்கும் இடையில பிணக்கு வந்ததைப்போலத்தான் இப்ப மகிந்தருக்கும் மைத்திரிக்கும் இடையில பிணக்கு வந்திருக்கு.

அப்ப வந்த பிணக்குக்குக் கணக்குத்தீர்க்க சரத் விரும்பினதைப்போல – சரத்தை மேற்குலகமும் ஐ.தே.கவும் பயன்படுத்தியதைப் போலத்தான், இப்ப மைத்திரியும் தன்ரை பிணக்குக்கு கணக்கைப் பார்க்க விரும்பிறார். இதுக்குத் தோதாக ஐ.தே.கவும் அமெரிக்காவும் ஒத்தூதுகின்றன.

விசயம் இவ்வளவுதான்.

இதைவிட்டால் இலங்கைத்தீவில் ஜனநாயகம் தழைக்கவோ, தப்பிப் பிழைக்கவோ போறதுக்காக மைத்திரியும் அவருடைய அணியும் பாடுபடவில்லை.

மைத்திரியின்ரை அணியில இருக்கிற ஆட்களைப் பார்த்தாலே இதை விளங்கிக் கொள்ளலாம்.

சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கும் மகிந்தரோட பிடுங்குப்பாடு. மகிந்தரிட்ட கடுமையாக அடிவாங்கிய கசப்பு சந்திரிகாவுக்கிருக்கு.

இதைப்போலத்தான் ரணிலுக்கும் மகிந்தரோட கடுமையான கடுப்பு.

அப்பிடித்தான் மகிந்தரை விட்டிட்டு அங்காற்பக்கம் போன ஆட்களுக்கும் அதிருப்திகள்.

இதெல்லாம் அவர்களுடைய (முன்னாள் நண்பர்கள் – பங்காளிகள் – கூட்டாளிகளிடையே ஏற்பட்ட) பிணக்குகள்.

இதற்காகவே அவர்கள் அடிபடுகிறார்கள். போட்டிபோடுகிறார்கள்.

மற்றும்படி ஜனநாயகத்தை வாழ வைக்கவோ, இலங்கையில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் உண்டாக்கவோ இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டுவாறதுக்கோ, நடந்த போர்க்குற்றங்களுக்குப் பரிகாரம் காணவோ ஆட்சி மாற்றத்தைப்பற்றி ஆரும் யோசிக்கவில்லை.

அதாவது தலைகளை மாற்றிறதைப் பற்றி யோசிக்கினமே தவிர, ஆட்சியை மாற்றிறதைப் பற்றி இவை யோசிக்கவில்லை என்று ஒரு ஆய்வாளர் எழுதியிருந்தது அப்பிடியே அச்சாகப் பொருந்தியிருக்கு.

இப்பிடிக் கொழும்பு அரசியல் இருக்கேக்க, முந்திப் பிரபாகரன் அழிஞ்சதைப்போல, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அழியப்போகுது. அப்பிடியே தமிழ்ச்சனங்களையும் அழிக்கப்போகுது.

ஏனென்றால், இதுவரையிலயும் மகிந்தரோ மைத்திரியோ தமிழ் – முஸ்லிம் தரப்புகளைப் பற்றிக் கவலைப்படவேயில்லை.

அப்பிடியிருக்கேக்க – அவசரப்பட்டுக்கொண்டு தங்கட தலையை ஏன் வீணாக வம்புக்குக் குடுக்க நினைக்கினமோ தெரியேல்ல.

இதுதான் தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேணும் என்ற விசர்க்குணம். இந்த விசர்க்குணம் கூட ஒரு வகையான உளவியல்குறைபாடுதான்.

தாய்நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால் தான், உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்க முடியும்.

- சீனப் பழமொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இனவாதிகளைப் பின்தள்ளுதல்!

இதோ அடுத்த மாதத்திலிருந்து இந்த நாட்டிற்குத் தலைவராக யார் வருவது நல்லது என்பதைத் தீர்மானிக்க முடியாமலும், தங்களைத் தெரிவுசெய்த மக்களுக்குத் திறுதட்டமாக ஒரு வழிகாட்ட முடியாமலும் முழிபிதுங்கி நிற்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இந்த நிலைமை ஏன் வந்தது என்று கண்டுகொள்ள முனையாமலும், தமிழ்த் தரப்பு விடும் பிழை என்ன என்பதைச் சொல்ல முடியாமலும் தமிழ் ஊடகங்கள் புத்திஜீவிகள் குருவானவர்கள் எல்லாம் –

"சிங்களவர் ஒருவரும் சரியில்லை என்பதுதான் உலகுக்கே தெரியுமே" என்று பொத்தாம் பொதுவாகச் சளாப்பிக் கொண்டிருப்பதிலோ அல்லது கள்ளமெளனம் காத்தபடியோ தங்கள் இயலாமையை மறைத்துக்கொள்கின்றனர்.

அந்தப்பக்கம் உள்ள எல்லோரையுமே ஒட்டுமொத்தமாக இனவாதிகளாக மாற்றிக்கொண்டிருப்பதுதான் இந்தப்பக்கம் தங்கள் அரசியல் லாபத்திற்கும் பத்திரிகை வியாபாரத்திற்கும் வசதி என்று கருதும் சிலரின் கருத்தூட்டல்களுக்குப் பின்னால்தான் தமிழ்ச் சமூகமே இழுபட்டுச் சென்றுகொண்டிருக்கிறது.

தமிழர்களுக்கு சமஷ்டித் தீர்வு வழங்கவும் தயாராக 1994–ல் ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்த சந்திரிகா கூட, இப்போது – தனது காலத்திலேயே போர் வெற்றிக்கான 75 சதவீத அடித்தளம் இடப்பட்டதாக உரிமைகோர வேண்டிய நிலையில் இருக்கிறார்.

தமிழ்த்தரப்புடன் உறவு வைத்துக்கொண்டால் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறமுடியாது என்ற நிலைமை இந்த நாட்டில் இப்போதும் தொடர வைப்பதற்கு யார் காரணம்?

தமிழ் இனவாத நிலைப்பட்டுச் சிந்திப்பதிலிருந்து இன்னும் மீள முடியாதவர்கள், இதற்கு உடனடியாகப் "பேரினவாத சக்திகளும் ஆட்சியாளர்களும்தான் காரணம்" என்று பதிலளித்துத் தங்களைப் புனிதப்படுத்திக்கொள்ள முந்துகிறார்கள்.

போர் மும்முரமாக நடந்துகொண்டிருந்த காலத்தில்தான், "தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்" என்று சிங்கள மக்களிடம் மேடைக்கு மேடை எடுத்துச்சொல்லி, அவர்களது பெரும்பான்மை ஆதரவுடன் பதவிக்கு வந்தவர் சந்திரிகா.

அப்போதும், "புலிகளுக்குப் பயந்து தமிழர்களுக்கு அதிகாரங்களைக் கொடுப்பதா" என்று கேட்கும் சிங்களத் தீவிரவாத சக்திகள் தெற்கில் இருக்கத்தான் செய்தனர். ஆனாலும் "தமிழ் மக்களுடன் சண்டை வேண்டாம்" என்ற சிங்கள வெகுமக்களின் கருத்தை வெளிக்கொணர்ந்துதான் சந்திரிகா வெற்றிபெற்றார்.

இன்றும், "தமிழ் மக்களுக்கு இன்னின்ன அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதால் இந்த நாட்டுக்கு எந்த ஆபத்தும் நேர்ந்துவிடாது" என்று ஒரு ஆளுமை மிக்க தலைமை தெற்கில் கூறுமானால், சிங்கள மக்கள் எதிர்க்கப் போவதில்லை என்பதை அந்த மக்களுடன் ஊடாடிப் பார்த்தவர்கள் அறிவர்.

உடனேயே, "அப்படிச் சொல்லக்கூடிய தலைமை யாரும் அங்கில்லையே" என்று புறணிபாடும் தமிழ்த்தரப்பால் எந்த மாற்றமும் இங்கு விளையாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அப்படி ஒரு தலைமை அங்கு உருவாகும் விதத்தில்தான் நம் தமிழ்த்தரப்பு இங்கு நடந்துகொள்கிறதா என்பதே தமிழர்களாகிய நாம் கேட்டுப்பார்த்துக் கொள்ள வேண்டிய சங்கதி.

அதாவது, அவர்களிடமுள்ள இனவாதத்தையும் பிழைகளையும் புதிது புதிதாகக் கண்டுபிடித்து, தமது அந்தத் திறமையில் தமிழர்களைக் கிளுகிளுப்படையச் செய்துகொண்டிருப்பதை விட்டுவிட்டு –

தமிழ்த்தரப்பினராகிய நாம் எவ்வாறு நடந்துகொண்டால் இந்த நாட்டின் ஏட்டிக்குப் போட்டி இனவாதிகளை ஓரங் கட்டிவிட்டு சாதாரண மக்கள் வெற்றிபெறலாம் என்று யோசிக்க வேண்டும்.

- ஆசிரியர்

# வடக்கு மாகாணசபை "பட்ஜெட்"

# நாளை மறுதினம் சபைக்கு வருகிறது

(கொழும்பு)

வடக்கு மாகாண சபையின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் புதன்கிழமை சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, அதன்மீதான விவாதம் வெள்ளிக்கிழமை வரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உத்தேச தொகைகளின் விபரங்கள் வருமாறு,

ஆளுநர் செயலகம் - 12 கோடியே 49 இலட்சத்து 19 ஆயிரம் ரூபா. முதலமைச்சர், அவரின் கீழான அமைச்சுக்கள் - 7 கோடியே 21 இலட்சத்து 17 ஆயிரம் ரூபா. விவசாய அமைச்சு - 5 கோடியே 31 இலட்சத்து 32 ஆயிரம் ரூபா. கல்வி அமைச்சு - 21 கோடியே ஒரு இலட்சத்து 65 ஆயிரம் ரூபா. சுகாதார அமைச்சு - 5 கோடியே 93 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா. மீன்பிடி அமைச்சு - 7 கோடியே 52 இலட்சத்து 31 ஆயிரம் ரூபா. மாகாண சபை அலுவலகம் - 12 கோடியே ஒரு இலட்சத்து 64 ஆயிரம் ரூபா. அத்துடன் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியாக 60 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதே சமயம் ஆளுநர் அலுவலகத்துக்கு ஒதுக்கப்பட்ட 2 கோடியே 49 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாவை விட மக்கள் பிரதிநிதிகளான 38 உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்ட பன்முக நிதித் தொகையை ஒத்த அதேயளவு நிதி ஆளுநருக்கும் முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை வரவு - செலவுத் திட்டம் குறித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிக் கூட்டம் இன்று திங்கட்கிழமை யாழ்.பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தேர்தல் சட்டங்கள் மீறல்;

# அமைச்சர் றிசாட் மீது கண்டனம்

கடந்த 2013 ஆம் ஆண்டு பெரும்போக விவசாயத்தின்போது கடுமையான வறட்சி நிலவியதன் காரணமாக வட மாகாணத்தில் விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டனர். இதனால் இப்பிரதேசத்திற்கு நட்டஈடுகள் வழங்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாறூக் விஷேட நிதி ஒதுக்கீடு ஒன்றினை அரசாங்கத்திடம் கோரி இருந்தார். அத்துடன் இதே விடயத்தை வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கோரியிருந்தனர்.

இந்நிலையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாகவும் விவசாயத் திணைக்களத்தினூடாகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் குறித்த வறட்சி நிதி, 2014 செப்ரெம்பர் முதல் வழங்கப்பட்டது. அரசியல் தலையீடுகள் காரணமாக குறித்த நிதி மன்னார் மாவட்டத்திற்கு உரிய நேரத்தில் வழங்கப்படவில்லை.

தற்போது ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தேர்தல் திகதி குறிப்பிடப்பட்டு தேர்தல் பிரசாரங்கள் மும்முரமாக இடம்பெறுகின்றன.

இந்நிலையில் நீண்ட காலமாக முடக்கி வைக்கப்பட்டிருந்த மேற்படி வறட்சி நிதியினை நேற்று முன்தினம் முசலி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் அமைச்சர் றிசாட் விநியோகித்து வைத்தார்.

மன்னார், முசலி, மாந்தை மேற்கு, மடு, நானாட்டான் போன்ற பிரதேச செயலகத்தில் வெவ்வேறு திகதிகளில் விநியோகிப்பதற்கு வழங்கப்பட்ட அறிவித்தல்கள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டு அனைத்துப் பிரதேச செயலர்களும் பயனாளிகளும் முசலி முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு அழைக்கப்பட்டனர்.

இதற்கு அரச வாகனங்கள், அரச அதிகாரிகள், அரச உடமைகள் என பல விடயங்கள் பயன்படுத்தப்பட்டன. இது தேர்தல் சட்ட விதிகளை மீறும் நடவடிக்கையாகும். மக்களுக்கு கிடைக்கவேண்டிய நலன்கள் நீண்ட காலமாக தடுத்து நிறுத்தப்பட்டது மாத்திரமன்றி அவற்றை தேர்தல் காலங்களில் பயன்படுத்தியமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி விடயத்தினை மன்னார் பிரதேச மக்கள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாறூக், வடக்கு மாகாணசபை உறுப்பினர் அஸ்மின் ஐயூப் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

அத்துடன் இது தொடர்பில் தேர்தல் திணைக்களத்திலும் மக்கள் முறைப்பாடு ஒன்றினையும் பதிவு செய்துள்ளனர்.

# ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் 25 பேர் அரசுடன் இணைவு

## கண்டியில் நேற்று

எம்பிலிப்பிட்டிய பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஜெயவீர மாதர ஆராச்சி உள்ளிட்ட 25 பேர் அடங்கிய குழுவினர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டுள்ளனர்.

நேற்றுக் காலை கண்டியில் வைத்து ஜனாதிபதியை சந்தித்த இவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே ஆதரவளிப்பதாக குறிப்பிட்டனர்.

25 வருடகாலமாக ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்த ஜெயவீர மாதரஆராச்சி உள்ளிட்ட சுமார் 25 பேரடங்கிய குழுவினரே இவ்வாறு ஜனாதிபதியை சந்தித்துள்ளனர்.

ஜனாதிபதி நேற்று கண்டியின் சில இடங்களில் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கட்சி தாவியவர்கள் மீது காத்திருக்கிறது நடவடிக்கை

கட்சி தாவிய உறுப்பினர்களுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் அண்மையில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்து கட்சி தாவியிருந்தனர்.


பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட கட்சி தாவிய அனைத்து உறுப்பினர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் அறிவுரைகளுக்கு அமைவாக இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு மாகாணசபையிலும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் முரண்பாடு கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

# வாக்குறுதி மீறலின் வரலாறு

**எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து**







**1995ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதாக சந்திரிகா ஜேவிபி க்கு எழுத்து மூலம் வாக்குறுதியளித்தார். ஆனால், பதவிக்கு வந்ததன் பின்னர் சந்திரிகா தமது வாக்குறுயை மீறினார். இனப் பிரச்சினையை தீர்ப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு சந்திரிகா, 2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் 3ஆம் திகதி புதிய அரசியலமைப்பு நகல் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதில் நிறைவேற்று ஜனாதிபதி முறை இருக்கவில்லை. ஆனால், அளவுக்கு அதிகமான அதிகாரப் பரவலாக்கல் மூலம் பிரிவினைக்கு உதவுவதாகக் கூறி, ஐ.தே.க. அந்த அரசியலமைப்பின் நகல்களை நாடாளுமன்றத்துக்குள்ளேயே தீயிட்டுக் கொளுத்தியது.**





**1977ஆம்** ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி பதவிக்கு வந்த போது, இந்நாட்டின் பெரும்பாலானவர்களின் அரசியல் நம்பிக்கைகளுக்கு எதிராக, தாராள பொருளாதார முறையை அறிமுகஞ் செய்து வைக்க முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன விரும்பினார்.

அதாவது தாம் தாராள பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தும் போது எழக் கூடிய எதிர்ப்புக்களை முறியடிக்கக் கூடிய அடக்குமுறை ஆட்சிமுறையொன்றும் அந்த அடக்குமுறைக்கு தமக்கு அதிகாரம் வழங்கும் சட்ட அமைப்பொன்றும் அவருக்கு அவசியமாகியது.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அவருக்கு நாடாளுமன்றத்தில் ஐந்தில் நான்கு பெரும்பான்மை பலம் கிடைத்தது. அவர் அதனைப் பாவித்து 1978 ஆம் ஆண்டு கொண்டுவந்த இரண்டாவது குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் தமக்கு வேண்டியதை செய்து கொண்டார். நாடாளுமன்றத்துக்கோ அல்லது நீதிமன்றத்துக்கோ வகை சொல்லாத நிறைவேற்று ஜனாதிபதி ஒருவர் அவ்வாறு தான் முதன் முத லாக இந்நாட்டில் உருவாகினார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்திய ஜே.ஆர். ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கி தாராள பொருளாதாரத்தை ஆரம்பித்து சுதந்திர வர்த்தக வலயங்களை ஆரம்பித்தார். அவற்றில் தொழிற்சங்கங்கள் ஆரம்பிப்பது தடை செய்யப்பட்டது. ஏனைய இடங்களில் இடம்பெற்ற தொழிற்சங்க போராட்டங்களும் மிக மோசமான முறையில் அடக்கப்பட்டன.

இந்தப் பொருளாதார மாற்றங்களின் நன்மை தீமைகள் எவ்வாறாயினும் அந்தப் பொருளாதாரத்தின் பாதுகாப்புக்காக அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி முறையின் ஆரம்ப நோக்கம் எதிர்ப்புக்களை அடக்குவதேயாகும்.

அந்த நிறைவேற்று ஜனாதிபதி தொழில் ரீதியாக மட்டுமன்றி தனிப்பட்ட முறையில் செய்த ஒரு காரியத்தையாவது நீதிமன்றத்தில் கேள்விக்குள்ளாக்க முடியாது.

அவருக்கு எதிராக அவரது மனைவி விவாகரத்துக் கோரியோ ஜீவனாம்சம் கோரியோ வழக்குத் தொடரவும் முடியாது என அக் காலத்தில் இருந்த முன்னணி இடதுசாரி அரசியல்வாதியான சரத் முத்தெட்டுவேகம ஒரு முறை கூறினார்.

அதன்பின்னர் இம் முறையை எதிர்த்து பலர் போராடியிருக்கின்றனர். சிறிமாவோ பண்டாரநாயக்க, கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா, மக்கள் விடுதலை முன்னணியின் ரோஹண விஜேவீர, மகிந்த ராஜபக்ஷ, அனுர பண்டாரநாயக்க, பீட்டர் கெனமன் போன்றோர் அவர்களில் முக்கியமானவர்களாவர்.

இன்று, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டப்படுவதைப் போலவே, நிறைவேற்று ஜனாதிபதி முறையை பாவித்து ஜனாதிபதி ஆர். பிரேமதாச, அமைச்சர்களை கைப்பொம்மைகளாக்கி தனிநபர் ஆட்சியை நடத்துவதாக குற்றஞ்சாட்டப்பட்டார்.

அவ்வாறு குற்றஞ்சாட்டிய லலித் அத்துலத் முதலி மற்றும் காமினி திஸாநாயக்க போன்ற அமைச்சர்கள் 1991ஆம் ஆண்டு பிரேமதாஸ அரசாங்கத்திலிருந்து விலகினர். இதன் விளைவாக 1994ஆம் ஆண்டு 17 ஆண்டுகள் நிலைத்திருந்த ஐ.தே.க.வின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆரம்பத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை தீவிரமாக ஆதரித்த இவர்கள், பின்னர் ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சியை ஆரம்பித்து நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்யும் போராட்டத்தை ஆரம்பித்தனர். 1994ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்றது. அதே ஆண்டு நடைபெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலிலும் சந்திரிகாவே வெற்றிபெறுவார் என்பது தெளிவாக தெரிந்தது.

இந்த நிலையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தி அதுவரை அந்த முறையை நியாயப்படுத்தி வந்த ஐ.தே.க. தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது.

1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தமது நிலைப்பாட்டை வெளியிட்ட அப்போதைய ஐ.தே.க. தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திஸாநாயக்க, சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்தால் தாம் அதனை ஆதரிப்பதாக கூறினார்.

இது தம்மிடம் இல்லாத அதிகாரம் மற்றவரிடம் இருக்கக்கூடாது என்ற நோக்கமேயல்லாது வேறொன்றுமல்ல. அதேபோல் தமது வெற்றி நிச்சயமாக இருந்ததால் அதுவரை நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்ய வேண்டும் என்ற சந்திரிகா, ஐ.தே.க.வின் ஒத்துழைப்பைப் பெற்று அம்முறையை இரத்துச் செய்ய முன்வரவில்லை. தமக்கு கிடைக்கப் போகும் அதிகாரத்தை விட்டுவிடக்கூடாது என்ற நோக்கமே அதுவாகும்.

ஆயினும், 1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதே சந்திரிகாவின் பிரதான வாக்குறுதியாக அமைந்தது. அந்த வாக்குறுதியை பிரதான இரு ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவர் தமக்கு எழுத்து மூலமாக தருவதாக இருந்தால், அவருக்கு ஆதரவாக தாம் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து வாபஸ் பெறுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நிஹால் கலப்பத்தி கூறினார்.

அதன்படி 1995ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதாக சந்திரிகா எழுத்து மூலமாக வாக்குறுதியளித்தார்.

ஆனால், பதவிக்கு வந்ததன் பின்னர் சந்திரிகா அந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை. அவர் தமது வாக்குறுயை மீறி இரண்டாண்டுகள் பூர்த்தியானதன் பின்னர் 1997ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி வாக்குறுதியை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி ஐ.தே.க. கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது. சந்திரிகாவின் அரசாங்கம் ஆர்ப்பாட்டக்காரர்களை மட்டுமன்றி அங்கிருந்த ஊடகவியலாளர்களையும் கடுமையாக தாக்கி விரட்டியடித்தது.இங்கு ஒரு சுவாரஸ்யமான விடயம் இருந்தது. அப்போது ஐ.தே.க. நிறை வேற்று ஜனாதிபதி முறை தொடர்பான தமது நிலைப்பாட்டை மீண்டும் மாற்றிக் கொண்டிருந்தது.

அதனை இரத்துச் செய்வதற்குப் பதிலாக அதில் மாற்றங்களை செய்ய வேண்டும் என்பதே ஐ.தே.க.வின் நிலைப்பாடாக இருந்தது. ஆனால், நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதென்ற சந்திரிகாவின் வாக்குறுதியை நிறைவேற்றுமாறு கோரி அக்கட்சி ஆர்ப்பாட்டம் செய்தது. சந்திரிகாவின் அரசாங்கமும் தமது வாக்குறுதியை நிறைவேற்றக் கோருவோரை அடித்துத் துரத்தியது.

இனப் பிரச்சினையை தீர்ப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு சந்திரிகா, 2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் 3ஆம் திகதி புதிய அரசியலமைப்பு நகல் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதில் நிறைவேற்று ஜனாதிபதி முறை இருக்கவில்லை. ஆனால், அளவுக்கு அதிகமான அதிகார பரவலாக்கல் மூலம் பிரிவினைக்கு உதவுவதாகக் கூறி, ஐ.தே.க. அந்த அரசியலமைப்பின் நகல்களை நாடாளுமன்றத்துக்குள்ளேயே தீயிட்டுக் கொளுத்தியது.

இந்த சம்பவத்துக்கு முன்னரும் பின்னரும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்ய அவசியமான மூன்றிலிரண்டு வாக்குகளை பெறுவதற்காக உதவத் தயார் என ஐ.தே.க. பல முறை கூறிய போதிலும் இனப் பிரச்சினைக்கான தீர்வோடேயே அதனை செய்ய வேண்டும் என்று கூறி சந்திரிகாவின் அரசாங்கம் அதனை நிராகரித்தது.

இந்தப் பின்னணியிலேயே 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். அப்போது ராஜபக்ஷ வெற்றிபெறுவார் என உறுதியாக கூற முடியாத நிலை காணப்பட்டது. உண்மையிலேயே பிரபாகரனின் தேர்தல் பகிஷ்கரிப்பின் பயனாகவே அவர் அத் தேர்தலில் வெற்றி பெற்றார்.

இந்த நிச்சயமற்ற நிலைமை காரணமாக மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகளின் உதவி ராஜபக்ஷவுக்கு அத்தியாவசியமாகியது. எனவே, அவர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதென்ற தமது கட்சியின் நிலைப்பாட்டை அழுத்தமான வாக்குறுதியாக வழங்கினார்.

அதேவேளை, அப்போது புலிகளுடனான போர் நிறுத்த உடன்படிக்கையும் அமுலில் இருந்தது. மக்கள் விடுதலை முன்னணி அதனையும் எதிர்த்தது. ராஜபக்ஷவும் அதனை எதிர்த்தார்.

எனவே, 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவு ராஜபக்ஷவுக்கு கிடைத்தது. ஆனால் வெற்றிபெற்ற ராஜபக்'வும் நிறைவேற்று ஜனாதிபதி முறையைப் பற்றிய பிரச்சினையை மறந்துவிட்டார். அதனை இரத்துச் செய்ய அவருக்கு போதிய நாடாளுமன்ற பலம் இருக்கவும் இல்லை.

2010ஆம் ஆண்டு போர் வெற்றியோடு ஜனாதிபதித் தேர்தலை நடத்திய ராஜபக்ஷ, அதில் பெரு வெற்றி பெற்று அத்தோடு பொதுத் தேர்தலையும் நடத்தினார். அதில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. எனவே அந்த வருடம் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்து செய்வதாக வாக்குறுதியளிக்காமல் இருப்பதில் அவர் கவனமாக இருந்துவிட்டார். 2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ.ம.சு.மு மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு ஓிரு ஆசனங்கள் குறைவாகவே பெற்றது. ஆனால், ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களை வாங்கி, அக்கட்சி தமது அரசாங்கத்துக்கு 162 ஆசனங்களை தேடிக் கொண்டது.

ஆனால், அந்த மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டு நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்குப் பதிலாக அரசாங்கம் அம்முறையை மேலும் பலப்படுத்தும் வகையில் 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக் கொண்டது.

இதுதான் நிறைவேற்ற ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கான முயற்சிகளின் வரலாறு. எனவே, மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) மைத்திரிபாலவுக்கு ஆதரவளிப்பதில் எச்சரிக்கையோடு செயற்படுவதில் நியாயம் இருக்கிறது.

# மைத்திரி வெற்றி பெற்றால்

## கே.பி.மீது சட்டநடவடிக்கை




(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றால் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ர மசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி குமரன் பத்மநாதனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

டுவிட்டரில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளதோடு நாட்டின் சாதாரண சட்டங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையுடன் குமரன் பத்மநாதனுக்கு தொடர்பு இருப்பதாக இந்திய புலனாய்வுத் துறையினர் குற்றம் சுமத்தியுள்ளனர். குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ள நிலையில் குமரன் பத்மநாதனுக்கு அரசாங்கம் பூரண சுதந்திரத்தை வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



குமரன் பத்மநாதனை விசாரணை செய்ய அண்மையில் இந்திய புலனாய்வுப் பிரிவினர் சர்வதேச காவல்துறையினரின் உதவியை நாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எதிரணிக்கு பலம் சேர்த்து நல்லாட்சியை உருவாக்கலாம்

## பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சியும் முயற்சி

(கொழும்பு)

பிரித்தானியாவின் கன்சர்வேட்டிவ் கட்சி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவை தோற்கடிப்பதில் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவிற்கு சவால் விடுக் கும் வகையில் களத்தில் குதித்துள்ள சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவளிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

கன்சர்வேட்டிவ் கட்சியின் மூன்று பிரதிநிதிகள் அண்மையில் மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து தமது ஆதரவினை தெரிவித்துள்ளனர்.

ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பேரவையின் தலைவர் கரு ஜயசூரிய மற்றும் ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஆகியோரையும் கன்சர்வேட்டிவ் பிரதிநிதிகள் சந்தித்துள்ளனர்.

இலங்கையில் நல்லாட்சியை ஏற்படுத்த பூரண ஆதரவளிக்கப் படும் என தெரிவித்துள்ளனர். இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பில் கன்சர்வேட்டிவ் கட்சி பிரதிநிதிகள் அறிக்கை தயாரித்து, பிரித்தானிய அரசாங்கத்திடம் ஒப்படைக்க உள்ளனர்.

# வீதி விபத்தில் சிக்கி இருவர் மரணம்




புத்தளம் - மன்னார் வீதி சாஹிரா தேசிய கல்லூரிக்கு முன்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் மரணமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞர்கள் இருவரும் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான வாகனமும் மோதியே இந்த விபத்து சம்பவித்ததாகவும் பொலிஸார் கூறினர்.

புத்தளம் வெட்டாளை பிரதேசத்தில் வதியும் முஹம்மது நுஸ்ரான் மற்றும் முஹம்மது ரினாஸ் ஆகியோரே மரணமடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

# மகிந்த VS மைத்திரி நேரடி விவாதத்துக்கு ஏற்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ஷவுக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நேரடி விவாதமொன்றை ஏற்பாடு செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தொழில்சார் நிபுணர்களும், சில புத்திஜீவிகள் அமைப்புகளும் ஏற்பாடு செய்ய முயற்சிக்கும் இந்த விவாதத்தில் ஜனநாயகம், சீரான நிர்வாகம், நீதிமன்றங்களில் சுயாதீனம் ஆகியவை பிரதான கருப்பொருள்களாக இருக்கும்.

இந்த விவாதத்தை ஒரே நாளிலோ அல்லது ஒருசில தினங்களிலோ நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. விவாதத்துக்கான எழுத்துமூல அழைப்பை இவ்வாரத்தில் அனுப்பவுள்ளதாகவும், விவாதத்தைப் பகிரங்க இடமொன்றில் நடாத்த உத்தேசித்துள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



பகிரங்க இடத்தில் இவ்விவாதத்தை நடத்த இவர்கள் விரும்பாவிட்டால் தொலைக்காட்சி மூலம் இருவருக்கும் சமமான நேரத்தை வழங்கி விவாதத்தை நடாத்தவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை வரலாற்றில் ஜனாதிபதித் தேர்தலொன்றில் இவ்வாறான விவாதமொன்று ஏற்பாடு செய்யப்படுவது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# வீடு வீடாக கதவு தட்டதிட்டம்

எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபன அறிக்கையில் அடங்கியுள்ள பிரதான விடயங்கள் உள்ளடக்கிய கையேடுகள் வீடு வீடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என எதிரணியின் தேர்தல் பிரசாரம் தொடர்பான இணை ஊடகப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஒழிப்பது தொடர்பான 100 நாள் வேலைத்திட்டம் உட்பட ஏனைய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் விதம் அடங்கிய கால அட்டவணையும் மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

அத்துடன் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டு நேற்று முன்தினம் அச்சுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த தேர்தல் விஞ்ஞாபனம் தேர்தல் நடப்பதற்கு இரு வாரங்களுக்கு முன்னதாக வெளியிடப்படும் எனவும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# தெற்கில் தலைகாட்டும் தேர்தல் கால வன்முறைகள்

## நேற்றுவரை 114 முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இதுவரை 114 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கபே அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து கபே வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இவற்றில் 32 முறைப்பாடுகள் தேர்தல் வன்முறைகள் பற்றியவை. மேலும் குண்டுகள் மற்றும் துப்பாக்கி பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் 9. அத்துடன் மக்கள் சொத்துக்களை தவறாக பயன்படுத்தியமை குறித்த முறைப்பாடுகள் 43 என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை டிசம்பர் 12 மற்றும் அதற்கு முன்னர் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் குறித்து தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் கபே அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தலையும் மீறி முதியவர்களுக்கு கையடக்கத் தொலைபேசி வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள கபே அமைப்பு, தனியார் நிறுவனம் ஒன்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த கைபேசிகள் வழங்கும் நிகழ்வு அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாபிடிய தலைமையில் கடந்த 11ஆம் திகதி மாத்தறையில் இடம்பெற்றது எனவும் குறிப்பிட்டுள்ளது.

அதற்கு முன்னதாக டிசம்பர் 7ம் திகதி அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாபிடிய தலைமையில் கேகாலையிலும் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

எனினும் 2014.12.04ஆம் திகதி வெளியிடப்பட்ட PCE/2015/19/ALL D 16 எனும் கடிதத்தில், குறித்த நிகழ்ச்சியை எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதிக்குப் பின் நடாத்துமாறு, தேர்தல்கள் ஆணையாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இது குறித்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளரிடம நேற்று முன்தினம் குறிப்பிட்டதாக கபே அமைப்பு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# விபத்தில் சிக்கி சிறுவன் மரணம்

ஆனமடு ஊரியாவ பகுதியில் சிறிய ரக உழவு இயந்திர வண்டியொன்று தடம் புரண்டதில் அதில் பயணித்த நான்கு வயது சிறுவன் ஒருவன் மரணமடைந்ததாக ஆனமடு பொலிஸார தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை உறவினர்களுடன் சிறிய ரக உழவு இயந்திர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றது. இதில் காயமடைந்த சிறுவன் உடனடியாக ஆனமடு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும், இச்சிறுவன் மரணமடைந்ததாகவும் பொலிஸார் கூறினர்.

# ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கதவடைப்பு

## கண்காணிப்பு பணிக்கு அனுமதி இல்லை

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள ஐரோப்பிய ஒன்றிய கண்பாணிப்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்படமாட்டாது என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்களை தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டாம் என நான்கு ஜனாதிபதி வேட்பாளர்கள் கோரியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை உறுப்புரிமை வகிக்காக அமைப்பு ஒன்றிலிருந்து கண்காணிப்பாளர்களை அழைப்பதற்கு அனைத்து வேட்பாளர்களின் அனுமதியும் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார். அனைத்து உறுப்பினர்களும் இணங்காவிட்டால் தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.



ஐரோப்பிய ஒன்றியத்தில் இலங்கையோ அல்லது தேர்தல் திணைக்களமோ அங்கம் வகிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறான ஓர் பின்னணியில் தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கட்டுவன் ஐயப்பசுவாமி ஆலய மகோற்சவம் இன்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

கட்டுவன் கரண்டக்குளம் அருள்மிகு ஸ்ரீ ஐயப்பசுவாமி ஆலய மகோற்சவம் இன்று உத்திர நட்சத்திரத்தில் முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

தினமும் காலை 9.00 மணியளவில் அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும் திருவிழா பூஜை, பஜனை, வசந்த மண்டப பூஜை, வீதியுலா என்பன நடைபெற்று அன்னதானத்துடன் நிறைவுபெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 22 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் 24 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும், மாலை கொடியிறக்க வைபவமும் நடைபெறும். (25)

# கலைஞர்களை கௌரவிப்பதன் மூலமே கலைத்துறையை மேம்படுத்த முடியும்

## தெல்லிப்பளை பிரதேசசெயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கலைகளை அழியவிடாது அடுத்த சந்ததிக்கு வழங்க வேண்டுமாயின் கலைஞர்கள் அவர்கள் வாழும் காலத்திலே கௌரவிக்க வேண்டும். அந்த வகையில் எமது பிரதேச செயலர் பிரிவில் கலைத்துறைச் செயற்பாட்டிற்காக தம் வாழ்நாளினை அர்ப்பணித்த கலைஞர்களுக்கு கலைச்சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது என வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலாளர் க.ஸ்ரீமோகனன் தெரிவித்தார்

வலி.வடக்கு தெல்லிப்பளை கலாசாரப்பேரவையின் கலாசார விழா 2014 நிகழ்வு அமரர் திலகநாயகம் போல் பத்தினியம்மா அரங்கமான பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்ற போது அந் நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சமூகத்தினை வழி நடாத்த வேண்டிய பொறுப்பு அரச நிர்வாகத்தினால் நியமிக்கப்பட்ட அரச அதிகாரிகளிடம் காணப்படுகின்றது.

வலி.வடக்கு பிரதேசம் சார்ந்த வலி.வடக்கின் பண்பாட்டுக் கூறுகளினை வெளிப்படுத்தும் வகையில் மாருதப்புரவீகம் என்னும் நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

இவ்வாறே எமது சமய விழுமியங்களினை பேணும் வகையிலும் இளம் பராயத்தினரை இவற்றில் ஈடுபாடு கொள்ளச் செய்யும் வகையிலும் தேவார திருமுறைப்பாடல்கள் இசை இறுவட்டில் வெளியீடு செய்யப்படுகின்றன.

தேவாரத்தில் இருந்து திருப்பொற்சுன்னம் வரை இசை இறுவட்டில் தயாரித்துத் தந்துள்ளோம். இவற்றினை மாவைக்கந்தன் என்னும் இணையத்தளததின் மூலம் நேரடியாக பார்க்க முடிவதுடன் அவற்றினை தரவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும்.

இனி வரும் காலங்களில் கிறிஸ்தவ மத பாடல்கள் சார்ந்த இறுவட்டும் சமய துறைசார் ஆலோசகர்களுடன் இணைந்து வெளியீடு செய்யப்படவுள்ளது.

எல்லாவித வளமும் இருந்தும் வாழ்விழந்த மண்ணாக வலி.வடக்கு மண் விளங்குகின்றது.

இது மீண்டும் செழிப்படையும் என்ற நம்பிக்கை எம் அனைவரிடமும் காணப்படுகின்றது.

எமது பிரதேசத்தில் இன்னும் மீள் குடியேற்றப்படாமல் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இத்தகைய சூழ்நிலையிலும் எமது பண்பாட்டு அடையாளங்களினை அழிய விடாது பாதுகாக்க வேண்டும் என்னும் நோக்கில் இத்தகைய விழாக்கள் எடுக்கப்படுகின்றன. (63)

## பரிசளிப்பு விழா

(யாழ்.நிருபர்)

காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் (அப்புத்துரை பள்ளிக்கூடம்) வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த வாரம் பாடசாலை அதிபர் எஸ்.நேர்த்திரானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் தி.யோன் குயின்ரஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர் வீ.இராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகவும கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (10)

# மாற்றுவலுவுடைய பிள்ளைகளுக்கு மாதாந்தம் 750 ரூபா கொடுப்பனவு

சமூகசேவைகள் அமைச்சினால் பாடசாலை செல்லும் மாற்றுவலுவுடைய பிள்ளைகளுக்கு 2015 ஆம் ஆண்டு முதல் மாதாந்தம் 750 ரூபா உதவிக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2015 ஆம் ஆண்டிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தின் மூலம் இந்த திட்டத்திற்கான சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

ஊனமுற்றோருக்கு மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் மாதாந்தம் 3000 ரூபா வழங்கும் திட்டத்திற்கும், பாடசாலை மாணவர்களிற்கு மாதாந்தம் 750 ரூபா உதவிப் பணம் வழங்கும் திட்டத்திற்கும், ஊனமுற்ற பிள்ளைகளின் தொழில்சார் திறன்களின் விருத்திக்காகவும் தொழில சார் திறன்கள் அபிவிருத்திக்காகவும் 100 மில்லியன் ரூபா வரவு செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஊனமுற்ற பிள்ளைகள் படிக்கும் பாடசாலை ஆசிரியர்களிற்கு ரயில போக்குவரத்து அனுமதிச் சீட்டு, காப்புறுதி வசதிகள், பண்டிகை முற்பணம் என்பன வழங்கவும் 2014 நவம்பர் மாத வரவு செலவுத் திட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.


பாடசாலை மாணவர்களின் திறனை மேம்படுத்த அமைச்சு தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (90)

## யோகாபயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ரவிசங்கர்ஜியின் வாழும் கலை அமைப்பின் யோகாப் பயிற்சிகள் பருத்தித்துறை ஞான சம்பந்தர் கலை மன்றத்தினால் இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளன.

இந்நான்கு தினங்களிலும் காலை 8.30 மணி முதல் முற்பகல் 11.30 மணி வரையும் மதியம் 12.45 மணி முத்ல் பிற்பகல் 3.45 மணி வரையும் பயிற்சிகள் இடம்பெறவுள்ளன.



கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நாவலர் விழா கடந்த வெள்ளிக்கிழமை சிறப்புற நடைபெற்றது. இதில் கலாசாலையில் அமைந்துள்ள நாவலர் சிலைக்கு பட்டாடைதரித்து மாலை அணிவிக்கப்பட்டது. (48)

## முரசின் இன்றைய பலன்

(15.12.2014 திங்கட்கிழமை)

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 29 ஆம் திகதி.
முழு நாளும் நவமி / சித்தம்.
உத்தர நட்சத்திரம் பி.ப. 04.29 வரை. பின் அத்தம்.
இராகு காலம 07.51 - 09.21 வரை. சுபநேரம 12.21 - 01.51 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
நம்பிக்கைத்தன்மை சிலருக்கு ஏமாற்றத்தைத் தரும். வாக்குறுதியை நிறைவேற்ற துடிப்புடன் செயற்படுவது நன்மை தரும்.

**ரிஷபம்**
மன அமைதி வேண்டி தெய்வ தலத்திற்கு சென்று வருதல், உங்களின் ஆலோசனைகள் கேட்க நண்பர்கள் முற்படல்.

**மிதுனம்**
பயண முயற்சிகளில் ஈடுபடல், நிகழவினைப் புறப்பணிக்க எண்ணுதல்.

**கடகம்**
கொடுக்கல் வாங்குதல் பிரச்சனை சுமுக நிலைக்கு வருதல், பலவீனத்தைப் புறந்தள்ளிவிட்டு செயற்படுவது நன்மை.

**சிம்மம்**
பிள்ளைகளுக்கு கூறிய அறிவுரைகள்ஏற்கமறுத்தல், வாகன யோகங்கிட்ட மூத்த சகோதரர் உதவுதல்.

**கன்னி**
பெற்றோரின் வற்புறுத்தலினால திருமணத்திற்கு இசைதல், குடும பத்தவர்கள் உங்கள் ஆலோசனைகளை ஏற்று நடக்கத்தலைப்படுதல்.

**துலாம்**
பழைய கடன் பிரச்சினைகளினால் அச்ச உணர்வு தக்க வைத்தல்.


**விருச்சிகம்**
குடும்ப விடயத்தில் பிறரின் தலையீட்டை அனுமதிக்க வேண்டாம், கவலையில்புத்தி திறத்தல்ஏற்படல்.

**தனுசு**
விவாகத்திற்காக வரன்தேடல், அரைகுறையாக இருக்கும்வேலைகள் முழுவடைதல்.

**மகரம்**
பெற்றோரின் நோய் காரணமாக விடுப்பில் நிற்க முயலுதல், அறிவு பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள்.

**கும்பம்**
முகம் பார்த்துக் கதைப்பதினால் துயர் விட்டுப்போதல், கடன பெறவங்கியில் விண்ணப்பம் செய்ய முயலல்.

**மீனம்**
சகோதரர் உறவில் ஏற்பட்ட விரிசல் அற்றுப்போதல், திகதி தப்பிய பொருட்கள் வந்தடையும் நிலைமை உண்டாகும்.



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் எஞ்சிய போட்டிகளிலிருந்து அவுஸ்ரேலிய அணியின் கப்டன் மைக்கேல் கிளார்க் விலகியுள்ளார்.

# மைக்கல் கிளார்க் விலகல்

அவருக்குப் பதிலாக 2 ஆவது டெஸ்ட் போட்டிக்கு ஷான் மார்ஷ் சேர்க் கப்பட்டுள்ளார்.

துணை கப்டன் பிராட் ஹேடின், எஞ்சிய போட்டிகளுக்கு அவுஸ்ரேலிய அணியின் கப்டனாக செயற்படுவார் என தெரிகிறது.

முதல் நாள் போட்டியின் கடைசி நாளான நேற்று முன்தினம் 44ஆவது ஓவரின்போது கிளார்க்கின் வலது தொடைப் பகுதியில் தசைநார் முறிவு ஏற்பட்டது.


இதையடுத்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவருக்கு ஸ்கான் பரிசோதனை செய்யப்பட்டது. கால் தசைநார் முறிவு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது.

தனது காயம் குறித்துப் பேசிய கிளார்க், நான் மீண்டும் கிரிக்கெட் விளையாட முடியாமல் போகலாம். எனினும் கிரிக்கெட்டுக்கு திரும்புவதற் கான எல்லாவற்றையும் செய்வேன்.

எனது ஸ்கான் சோதனை முடிவு களை நிபுணர்கள் ஆராய்ந்து வரு கின்றனர். எவ்வளவு காலம் நான் ஓய் வில் இருக்க வேண்டும் என தெரிய வில்லை.

உலகக் கோப்பை மற்றும் எங்களின் முதல் பயிற்சி ஆட்டம் பற்றி நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். முத் தரப்புத் தொடரில் விளையாட விரும்பு கிறேன் என்றார்.

# 4 ஆம் இடத்தில் ஆனந்த்



லண்டன் கிளாசிக் செஸ் தொடரின் மூன்றாவது சுற்றை இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் சமன் செய்தார்.

லண்டனில் நடைபெற்று வரும் இந்தத் தொடர் ரவுண்ட் ராபின் முறையில் நடைபெறுகிறது. இதில் ஆறு வீரர்கள் பங்கேற்றுள்ளனர். முதலிரண்டு சுற்று களை சமன் செய்த ஆனந்த், நேற்று முன்தினம் சனிக் கிழமை நடைபெற்ற மூன்றாவது சுற்றில் அமெரிக்காவின் ஹிகரு நகமுராவை சந்தித்தார்.

கறுப்பு நிறக் காய்களுடன் ஆடிய ஆனந்த், ஆட்டத்தை சிறப்பாகத் தொடங்கிய போதிலும் வெற்றி வசப்படவில்லை. 18 ஆவது நகர்த்தலில் ஆட்டத்தை சமன்செய்ய இருவரும் சம்மதித்தனர். மூன்று சுற்றுக்களின் முடி வில் ஆனந்த் 3 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளார்.



# தோல்வி கற்பனையாகவுள்ளது

## கவாஸ்கர்

(புதுடில்லி)

முதல் இன்னிங்ஸில் 444 ஓட்டங்கள் குவித்த இந்திய அணி டெஸ்டில் தோல்வி அடைந்ததை என்னால் கற்பனையிலும் நினைத்துப் பார்க்க முடியவில்லை. இந்திய அணியின் இந்த தொடக்க தோல்வி மற்றொரு "ஒயிட் வாஷ்" நிலை அச்சாரம் போடப்பட்டுள்ளது. என முன்னாள் கப்டனும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான கவாஸ்கர் தெரி வித்துள்ளார்.

இந்திய அணியின் இந்த தோல்வி குறித்து அவர் கருத்து தெரிவிக்கை யில்,

முரளிவிஜய் வீராட் ஹோலி ஜோடி சிறப்பாக விளையாடியது பெருமை அளிப்பதாகும். ஆனால் இந்த ஜோடி பிரிந்தவுடன் ரகானேயும், ரோகித்சர்மாவும் அடுத்தடுத்து பெவிலியின் திரும்பினர். இந்த நேரத்தில் சமனிலைக்கு இந்திய வீரர்கள் முயற்சித்து இருக்க வேண்டும்.

வெற்றி பெற வேண்டும் என்று நினைத்து ஆடியதால் தோல்வி ஏற்பட்டது.

முரளி விஜய் இரண்டு இன்னிங்ஸிலும் சிறப்பாக விளையாடினார். 1 ஓட்டத்தில் சதத்தை தவறவிட்டது துரதிஷ்டமே. விராட்ஹோலியின் சதம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

ரகானே, புஜாரா முதல் இன்னிங்சில் அரைச்சதம் அடித்தனர். தவான் பேட்டிங் மோசமாக இருந்தது. இந்த டெஸ்டில் அவர் பாடம் கற்று இருப்பார். அடிலெய்டு டெஸ்டை "சமன் செய்ய முடியாமல் தோல்வியை தழுவியதால் டெஸ்ட் தொடரை வெல்வது என்பது தற்போது மிகவும் கடினமானது.

2 ஆவது டெஸ்ட் நடைபெறும் பிரிஸ்பேன் ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு ஏற்றது. இந்த டெஸ்ட் இந்திய வீரர்களுக்கு பெரும் சவாலாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

விளையாட்டு செய்திகள்


# ஹோலிக்கு பாராட்டு



அறிமுக டெஸ்டில் கப்டன் பதவியில் இரண்டு இன்னிங்ஸிலும் சதம் அடித்த 2 ஆவது வீரர் ஹோலி ஆவார். இதற்கு முன்பு கிரேக் சேப்பல் கப்டன் பதவியில் முதல் டெஸ்டில் 2 இன் னிங்ஸிலும் சதம் அடித்து இருந்தார்.

விராட்ஹோலியின் இந்த சாதனையை கிரேக் சேப்பல் பாராட்டியுள்ளார். அவர் கூறும போது, "விராட் ஹோலிக்கு எனது வாழ்த்துக்கள். தன் னம்பிக்கையுடன் அணியை வழி நடாத்திச் சென்றார். கப்டன் பதவியில் பொறுப்புடன் செயற்பட்டார் என்றார்.

# வீரர்களுக்கு அபராதம்



இந்திய அவுஸ்ரேலிய அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி அடிலெய்டுவில் நடந்தது. இந்த டெஸ்டில் அவுஸ்ரேலியா 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த 4 ஆவது நாள் ஆட்டத் தின்போது வீரர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது.

வருண் ஆரோனின் பந்தில் வோர்னர் அவுட் ஆனபோது நோ-பால் என்று அறிவிக்கப்பட்டது. அப்போது வார்னருக்கும், தவானுக்கும் இடையே ஆடு களத்தில் கடுமையான வாக்கு வாதம் ஏற்பட்டது.

இதேபோல மற்றொரு சம்பவத்தில் அவுஸ்ரேலிய வீரர் சுமித்துடன் தற்காலிக கப்டன் விராட் ஹோலி மோதினார். எல்.பி.டபிளயூ அப்பீல் தொடர்பாக அவரை தடுத்து வாக்கு வாதத்தில் ஈடுபட்டார்.

இந்த 3 வீரர்களும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) நடத்தை விதியை மீறியது உறுதி செய்யப்பட்டது.

லெவல் 1 விதி 201.8 கீழ் அவர்கள் குற்றச்சாட்டு கூறப்பட்டது.

இதைத் தொடர்ந்து இந்த 3 பேருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. வோர்னருக்கு 15 சதவீதமும், விராட் ஹோலி, தவானுக்கு தலா 30 சதவீதமும் போட்டி கட்டணத்தில் இருந்து அபராதமாக விதிக்கப்பட் டுள்ளது. ஐ.சி.சி. இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

# பாகிஸ்தான் வீரர்களின் அநாகரிக செயற்பாடு



சம்பியன்ஸ் டிராபி ஹொக்கி போட்டியின் அரையிறுதியில் இந்தியாவை வீழ்த்திய பாகிஸ்தான் வீரர்கள் மைதானத்தில் அநாகரிகமாக செயற்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சம்பியன்ஸ் டிராபி ஹொக்கி தொடரின் அரையிறுதிப் போட்டி ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா அரங்கத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் காலிறுதியில் பெல்ஜியத்தை வென்ற இந்திய அணி, அரையிறுதியில் பாகிஸ்தான் அணியை எதிர் கொண்டது. இந்தப் போட்டியில் பாகிஸ்தான், இந்தியாவை 4-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு நுழைந்தது.

போட்டியை வென்ற மகிழ்ச்சியில் பாகிஸ்தான் வீரர்கள் அரங்கத்தில் அமர்ந்திருந்த இரசிகர்களை பார்த்து தவறான வார்த்தைகளால் பேசியதுடன் அநாகரிகமாக நடந்துள்ளனர்.

இதனால் இரசிகர்கள் அதிர்ச்சிக்குள்ளாகினர். பாகிஸ்தான் அணி பயிற்சியாளர் ஷெனாஸ் ஷேக் முயற்சி செய்தும் பாகிஸ்தான் அணி வீரர்களை கட்டுப்படுத்த முடியவில்லை.

இதைத் தொடர்ந்து அவர்கள் குழந்தைகள் போன்று நடந்து கொண்டனர் என்றும், நடந்த சம்பவத்திற்கு நான் மன்னிப்புகேட்டுக்கொள்கிறேன் எனவும் ஷேக் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.


எனினும் இரசிகர்களிடையே கீழ்த்த ரமாக நடந்துகொண்ட பாகிஸ்தான் ஹொக்கி வீரர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி ஹாக்கி இந்தியா வலியுறுத்தியுள்ளது. அதுவரை, எவ் விதமான சர்வதேச போட்டியையும் இநதியாவில் நடத்தமாட்டோம் எனவும் தெரிவித்துள்ளது.



யாழ். மன்பௌல் உழும் முன்பள்ளியின் வருடாந்த கலைவிழாவும் பரிசில் வழங்கலும் அண்மையில் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வையும் விருந்தினர் ஒருவர் உரையாற்றுவதையும் விருந்தினர் மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (105)

# ஊடகதர்மத்தை ஊடகவியலாளர்களும் பின்பற்றுவது அவசியமானதாகும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(கிளிநொச்சி)

உண்மை, நடுநிலைமை, நியாயம் என ஊடக தர்மத்தின் பால் செயற்படும் ஊடகங்கள் தான் மக்கள் மத்தியில் வரவேற்பை பெறுகின்றன. அந்த வகையில் ஊடகத்துறைக்குள் பிரவேசித்துள்ள ஊடகவியலாளர்கள் ஊடகதர்மத்தின்படி செயற்படவேண்டும் என ஈ.பி.டி.பி. யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பத்து ஊடகவியலாளர்களுக்கு மடிக்கணனிகள் மற்றும் புகைப்படக் கருவிகள் என்பவற்றை வழங்கி வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர்களுக்கு வாழ்வாதார உதவி திட்டம் கிளிநொச்சியில் தான் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தெற்கில் கூட வாழ்வாதார உதவித் திட்டம் என்றில்லாமல் இலகு கடன் திட்டத்தில் உதவிகள் வழங்கப்படுகிறது. அரசின் திட்டத்தின் மூலம் ஊடகவியலாளர்களுக்கு மடிக்கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

பெரும்ளவுக்கு ஊடகவியலாளர்களுக்கான உதவித்திட்டங்கள் மூத்த ஊடகவியளார்களுக்கே கிடைத்துவிடுகிறதே தவிர இவ்வாறு பிரதேச ஊடகவியலாளர்களுக்கு கிடைப்பதில்லை.

மீள்குடியேற்றத்தின் பின்பு கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், வியாபாரிகள் என அந்தந்த துறைசார்ந்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்க்கப்பட்டன. ஆனால் ஊடகவியலாளர்களை எவரும் கருத்தில் எடுக்கவில்லை. இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட ஊடகவியாளர் சங்கத்தினர் தங்களுக்கு வாழ்வாதார உதவிகள வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

அதற்கமைவாக இன்று முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பத்து ஊடகவியலாளர்களுக்கு தொழில் கருவிகள் வழங்கப்படுகின்றன. ஏனையவர்களுக்கும் வழங்க நாம் நடவடிக்கை மேற்கொள்வோம் என்றார்.

# மானிப்பாய் பிரதேச சபை தவிசாளராக மகேந்திரன் விரைவில் நியமனம்

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளராக சின்னத்துரை மகேந்திரன் விரைவில் நியமனம் செய்யப்படவுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெயநேசன் தவிசாளர் பதவி தனக்கு வேண்டாம் என தெரிவித்து இராஜினாமா கடிததததை சமர்ப்பித்ததை தொடர்ந்து உப.தவிசாளராக இருந்த ச.சிவகுமாரை மாவை சேனாதிராஜா நீண்டகால இழுபறியின் பின்னர் வர்த்தமானி பத்திரிகை அறிவிப்பின் ஊடாக தவிசாளராக்கினார்.

இதன் பின்னர் 6 மாதங்கள் சேவையாற்றிய நிலையில் நோயவாய்ப்பட்டு பின்னர் மாரடைப்பினால் மரணமானார்.

தற்போது தமிழரசு கட்சியின் நீண்ட கால உறுப்பினராக பணிபுரியும் சின்னத்துரை மகேந்திரன் உப - தவிசாளர் பதவியுடன் பதில் தவிசாளராக பணியாற்றி வருகின்றார்.

இதேவேளை பொருத்தமான ஓர் உப தவிசாளரையும் காலம் தாழ்த்தாது நியமித்து உதவுமாறு சக கூட்டமைப்பு உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (92)

# பேருந்துகளுக்கிடையில் போட்டி விசனமடையும் பொது மக்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளின் போட்டித் தன்மையான போக்குவரத்தால் பேருந்தில் பயணம் செய்யும் பயணிகள் மற்றும் ஏனைய பயணிகள் பெரும அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதிவழியாக சேவையில் ஈடுபடும் 782, 786, 788, 787 ஆகிய பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் மானிப்பாய், ஆனைக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் வரை ஒன்றன்பின் ஒன்றாக போட்டி போட்டு ஓடுவதால் பேருந்து தரிப்பு நிலையங்களில் காத்து நிற்கும் பயணிகளை ஏற்றாது செல்வதாகவும் இதனால் தாம் தமது தேவைகளை குறித்த நேரத்திற்கு சென்று நிறைவேற்ற முடியாதுளளதாகவும் பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் இது விடயத்தில் பாராமுகத்தோடு அசிரத்தையாக செயற்படுவதாகவும் தெரிவிக்கும் பயணிகள் தமது போக்குவரத்துக்கு ஏற்ற நடவடிக்கைகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர். (66)

# நாவாந்துறை மண்பிட்டி ஒழுங்கை மூன்றரை இலட்சம் செலவில் புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை மண்பிட்டி ஒழுங்கை மூன்றரை இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மூன்றரை இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலமாக இந்த ஒழுங்கை கல்லிடப்பட்டு தார் ஊற்றி புனரமைக்கப்பட்வுள்ளது.

இதற்கான வேலைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன முன் னாள் யாழ். மாநகர துணைமுதல்வர் துரைராசா இளங்கோ (றீகன்) வின் கண்காணிப்பின் கீழ் இந்த வீதி புனரமைப்புப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. (பா)



# பரமர் சங்கமம்

கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் கெட்ட பின்பு ஞானி ரெண்டுமே கிட்டத்தட்ட ஒரேகாரியத்தையே சுட்டும். அதாவது செய்ய வேண்டிய வேலைகளை செய்யக்கூடிய நிலைமைகள் எவ்வளவோ கனிந்து கிடக்கும். அப்போதெல்லாம் அதைத் தட்டித தட்டி விட்டு செய்ய முடியாக் காலங்களில் அதை மீட்டிப் பார்ப்ப தோடை அடுத்த கட்டத்தில் செய்யலாமெண்டு பீத்துறது தான்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் சில வருடங்களுக்கு முன்பாக ஆனால் பதவியை விட்டிறங்கிய பின்னால் நூலொன்றை எழுதி வெளியிட்டிருந்தார். அதில் இனப்பிரச்சினைத் தீர்வில் அக்காலத்தில் தன்னால் நல்ல தீர்வொன்றை வழங்கியிருக்க முடிந்திருக்கும். அவ்வேளை தான் பிழைவிட்டு விட்டதாகவும் எழுதியுள்ளார்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது தற்போதைய ஜனாதிபதி புலிகளுடன் பேச்சு நடாத்தி தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்று வாக்களித்தார். இரண்டு தடவை பதவியிலிருந்தும் தீர்க்கப்படவில்லை. இப்பொழுது புலிகளிடம் இருந்தெடுத்த பவுணைக் குடுத்த வைபவத்தில் இந்தத் தங்கத்தைப் போன்ற தேசத்தையும் உங்களுக்குத் தருவேனென்று மூன்றாம் முறையும் கசப்பான மாத்திரையை இனிப்புத் தடவிக் கொடுத்துள்ளார்.

இவ்விதம் 1987 இல் சமாதானப் படையாக வந்த இந்திய இராணுவம் வடபகுதியை பிளாஷ்டிக் ஷெல் மழை பொழிந்து சல்லடை போட்டுச் சென்றது. அக்காலத்தில் இலங்கை வந்து சென்ற இராணுவத் தளபதிகள் ஒய்வின் பின்பாக நூலகளை எழுதினர். அவற்றிலும் தமிழ் மக்களுக்கு இன்ன இன்னமாதிரித் தீர்வை வழங்கலாமென்ற அவிப்பிராயங்களையும் குறிப்பிட்டிருந்தனர்.


ஆட்சிப் பீடத்துக்கும் பதவி நிலைகளுக்கும் வருவதற்கு முன்பாக வாக்களிக்கும் ஜனாதிபதிகள், படைத்தளபதிகள் ஆட்சியை விட்டும், அந்தஸ்த்தை விட்டும் அகன்ற பின்பாகவே ஞானோதயம் பிறந்தவர்களாகப் புலம்புவது ஒண்டும் புதிய சமாச்சாரம் இல்லையல்லவா?

கடைசியாக பொது அணி வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் குதித்திருக்கும் மைத்திரிபால சிறிசேனவும் அந்த உலகப் புகழ்பெற்ற பொய்மொழியைக் குறிப்பிடத் தலைப்பட்டிருப்பதுதான் பகிடி! அவர் சொல்கிறார் தேசிய அரசை அமைத்த பின்பே தமிழர் பிரச்சினைக்கான தீர்வை யோசிக்கலாமெண்டு. பொதுத் தேர்தல்களில் வடக்கு மக்களின் வாக்குகள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவே உதவ முடியும். ஜனாதிபதித் தேர்தலில் மட்டும் வெல்ல வைப்பதும், தோற்கடிப்பதும் அவ்வாக்குகளுக்கு வலுவுண்டென்பதை இந்தத் தலைவர்கள் மறந்து விடக்கூடாது.

ஏமாந்த சோணகிரிகளாக இருக்கும் வடபகுதி வாக்காளர்கள் கண்கெட்டபின் சூரியநமஸ்காரம் செய்யக்கூடாது. அதுவே இவ்வளவு காலங்களும் தொடர்ந்து கொண்டிருக்கும்... என்னதான் சொல்லுறே... இல்லையே பின்னை...

# புற்றுநோய் 3

- பத்ரி -





புற்றுநோய் பற்றி சித்தார்த்தா முகர்ஜி எழுதியுள்ள புத்தகத்தை உண்மையில் கான்சர் என்சைக்ளோபீடியா என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் வறண்ட நடை கொண்டதல்ல. எடுத்தால் புத்தகத்தைக் கீழே வைக்கமுடியாத அளவுக்கு சுவாரசியமானது.

அமெரிக்காவில் ஆன்கொலஜிஸ்ட் மருத்துவரான இவர், தன் நோயாளி ஒருவர் கேட்டுக்கொண்டதன் பேரில் இந்தப் புத்தகத்தை எழுத ஆரம்பித்திருக்கிறார். என் உடலில் நிகழ்ந்துகொண்டிருக்கும் இந்த கான்சர் என்னதான் செய்கிறது என்ற கேள்விக்கான பதில் இவ்வளவு அருமையாக நம்மைப்போன்ற சாதாரணர்களும் புரிந்துகொள்ளக்கூடிய புத்தகமாக, கான்சரின் "வரலாறாக" ஆகியுள்ளது.

கி.மு 2500இல் எகிப்தில் மருத்துவரான இம்ஹோடெப்புக்கு புற்று நோய் பற்றித் தெரிந்துள்ளது. இதற்கு மருந்து கிடையாது என்பதுடன் அவருடைய சிகிச்சை முடிந்துவிடுகிறது. கி.மு 500இல் கிரேக்க ராணி அட்டோஸாவுக்கு மார்பகப் புற்று நோய் வந்தது குறித்துப் பதிவுகள் உள்ளன. அதை அவர் தன் அடிமையைக் கொண்டு அறுத்து எடுக்கிறார். ஆனால் அதனால் அவரது உயிர் போவதைத் தடுக்க முடியவில்லை.

அடுத்து 18ஆம் நூற்றாண்டில் அறுவை சிகிச்சைகள் ஆரம்பிக்கின்றன. எதற்கும் பலன் கிடையாது. ஏனெனில் அறுத்து எறிந்தால் போய்விடப் போகிற நோய் அல்ல இது. கான்சர் கலங்கள் உடலில் இருக்கும்வரை அவை இரத்தம் மூலம் வேறு இடங்களுக்குப் பரவி உடலை அப்படியே அழித்துவிடும்.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்தான் கெமோதெரப்பியும் ரேடியோதெரப்பியும் நடைமுறைக்கு வருகின்றன. பின்னர் இந்தச் சிகிச்சை முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு பலரது உயிர் காப்பாற்றப்படுகிறது. ஆயுட்காலம் நீட்டிக்கப்படுகிறது.




இன்று இரத்தப் புற்றுநோயிலிருந்து பெரும்பாலும் ஒருவரைக் காப்பாற்றி விடலாம். பெண்களுக்கு மிக அதிகமாக வருவது மார்பகப் புற்றுநோய். மாம்மோகிராம் மூலமாக இது வருகிறதா இல்லையா என்பதைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும். ஆரம்பத்திலேயே கண்டுபிடித்தால் கெமோதெரப்பி, ரேடியோதெரப்பி மூலம் சரி செய்துவிடலாம். கொஞ்சம் பரவினாலும் மாஸ்டெக்டமி என்ற வகையில் மார்பகங்களை வெட்டி, கான்சர் பரவிய இடங்களையெல்லாம் குடைந்து எடுத்து, தொடர்ந்து கெமோதெரப்பி, ரேடியோதெரப்பி மூலம் பெரும்பாலும் காப்பாற்றிவிடலாம்.

வயதான ஆண்கள் பலருக்கும் வரும் புரோஸ்டேட் கான்சர் அதிக அபாயங்கள் இல்லாதது. பலர் தங்களுக்கு அந்த கான்சர் இருப்பது தெரியாமலேயே இறந்தும் போகிறார்கள்.

சிகரெட் பிடிப்போருக்கு நுரையீரல் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகள் மிக அதிகம்.

பிறவகை கான்சர்கள் எப்படி, யாரைத் தாக்கும் என்பது குறித்து நமக்கு ஒன்றும் தெரியவில்லை. அது ஓரளவுக்குப் பரவிய பின்னரே நம்மால் கண்டுபிடிக்க முடிகிறது. எக்ஸ்-ரே, எம்.ஆர்.ஐ ஸ்கான், சிடி ஸ்கான் ஆகியவற்றில் எங்கோ ஒரு மூலையில் உள்ள சிறு கட்டியைக் கண்டுபிடிப்பது கடினம். கொஞ்சம் பெரிதாக ஆகும் போதுதான் அதைப் பார்க்கவே முடியும். அதன்பின் அது எப்படிப்பட்டது என்பதைப் பொறுத்து அறுவை, கெமோதெரப்பி, ரேடியோதெரப்பி ஆகியவை நிகழும்.

சில்வர் புல்லட்டாக அனைவரும் எதிர்பார்ப்பது க்லைவெக் போன்ற அரும்பெரும் மருந்தை. அதை விழுங்கினால் அந்த மருந்து போய் மியூட்டேஷனுக்கு மாற்றான செயலைச் செய்து கான்சரை இல்லாமல் ஆக்கிவிடும் என்று. ஆனால் அம்மாதிரியான மருந்து நம் வாழ்நாளுக்குள் சாத்தியமா என்று தெரியவில்லை. ஹியூமன் ஜீனோமை வகை செய்து தொகுத்ததுபோல் மனித கான்சர் ஜீனோமை வகைசெய்து தொகுக்கும் வேலையில் ஆராய்ச்சியாளர்கள் இறங்கியுள்ளனர். இந்த வேலை முடிந்துவிட்டால், குறைந்தபட்சம் ஒருவருக்கு வந்துள்ள கான்சர் எந்த மியூட்டேஷனில் வந்துள்ளது என்பதைக் கண்டுபிடிக்கலாம். அதற்கடுத்து, இவற்றுக்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால், அவற்[illegible] பரிந்துரைக்கலாம்.

இன்னும் எதிர்காலத்தில் மியூட்டேஷன் ஆன ஜீன்களை பழுதுபார்க்கும் முறைகள் வரக்கூடும்.

ஆனால் இப்படியெல்லாம் சாவிலிருந்து தப்பித்து என்ன செய்யப்போகிறோம் என்ற கேள்வியும் உள்ளது. முதுமை என்பதுதான் உள்ளதிலேயே மிக மோசமான நோய்.

---

# கே.வி. மகாதேவன் 41



- பி.ஜி.எஸ்.மணியன் -

Ballade of the soldier என்ற ரஷ்யக் கதையை தழுவி கவிஞர் கண்ணதாசன் கதை வசனம் பாடல்கள் எழுதி வெளிவந்த படம் "தாயே உனக்காக".

காக்கும் கரங்களில் அறிமுகமான இளம் நடிகர் சிவகுமார் முழுமையான கதாநாயகனாக நடித்த படம். அவருக்கு ஜோடி புஷ்பலதா.

அப்போதுதான் படவுலகில் நுழைந்திருந்த சிவகுமாரை ஊக்குவிப்பதற்காகவோ என்னவோ அப்போது முன்னணியில் இருந்த பிரபல நட்சத்திரங்களான நடிகர் திலகம் சிவாஜி கணேசன், எஸ்.எஸ். ராஜேந்திரன், முத்துராமன், நாகேஷ், பத்மினி, தேவிகா, ஜெயலலிதா, விஜயகுமாரி அனைவருமே சின்னச் சின்ன வேடங்களில் தோன்றி கௌரவ நடிகர்களாக நடித்த படம் இது.

சீர்காழி கோவிந்தராஜன் பாடிய "கருநீல மலை மேலே தாயிருந்தாள். காஷ்மீரப் பனிமலையில் மகன் இருந்தான்." என்ற அசரீரிப் பாடல் ஒரு அற்புதமான அமைப்பு.

அமைதிப் புறாவே அமைதிப் புறாவே அழைக்கின்றேன் உன்னை" - பி.சுசீலாவின் இனிமை பொங்கும் குளுமைக் குரலில்.

மேற்கத்திய இசையில் கே.வி.மகா-தேவனின் ஞானத்தைப் பறைசாற்றும் அற்புதமான பாடல் தான் "ஏசுநாதர் பேசினால் அவர் என்ன பேசுவார்" பாடல்.

பொங்கோஸ், வயலின், பியானோ, கிட்டார் ஆகிய நான்கே நான்கு வாத்தியங்களை கையாண்டு இந்தப் பாடலை அமைத்திருக்கும் விதம் பிரமிக்க வைக்கிறது.

அதிலும் சரணங்களுக்கு இடையே வரும் இணைப்பிசையில் தாள வாத்தியங்களே இல்லாமல் வயலினின் வீச்சு முடியும் இடத்தில் பியானோ எழுப்பும் இசை இருக்கிறதே.. அந்த டியூன் கண்டிப்பாக குறிப்பிடப்படவேண்டிய ஒன்று.

"ஹார்ப்" என்னும் இசைக்கருவியில் வெளிப்படுத்தக்கூடிய அந்த டியூனை பியானோவில் கொண்டுவருவது என்பது சிரம சாத்தியமான ஒன்று. பியானோவில் அதைக் கையாள்வதை "ஹார்ப் ஸ்டைல்" என்பார்கள். வெஸ்டர்ன் க்ளாசிக்கல் வகையில் பீத்தோவன், மொசார்ட் ஆகியவர்களின் இசையில் அவ்வப்போது ஒலிக்கும். இந்த வகை டியூனை அதிகமாகக் கையாண்டவர் சைகொவ்ஸ்கி.

அவரது பாடல்களில் அதிகமாக இந்த "ஹார்ப் ஸ்டைல்" பிரயோகம் இடம் பெறும். இந்த ஸ்டைல் கம்போசருக்கும், இசைப்பவருக்கும் தனி மரியாதை மேற்கத்திய இசை உலகில் கொடுக்கப்படும்.

இந்த மெட்டை கே.வி. மகாதேவன் அமைக்க அதை அனாயாசமாக வாசித்த அவரது குழுவில் பியானோ வாசிப்பாளராக இருந்த திவாகரின் திறமை குறிப்பிடப்படவேண்டிய ஒன்று. (இந்த திவாகர்தான் தேவர் பிலிம்சின் "கொங்கு நாட்டு தங்கம்" படத்துக்கு இசை அமைத்தவர்).

ஹம்மிங் பாடகியாக மட்டுமே படவுலகில் வலம் வந்த பி.எஸ். வசந்தா பாடிய அபூர்வமான சில பாடல்களில் இன்றளவும் அவரது பெயர் சொல்லும் பாடலாக அமைந்த பாடல் இது.

சின்னப்பாதேவரின் சாதனைப் படம் ஒன்று உண்டு என்றால் அது "முகராசி".

சாதனைப் படமா எந்த விதத்தில் என்று புருவத்தை உயர்த்துபவர்களுக்காக சொல்கிறேன்.

வெறும் பன்னிரண்டே நாட்களில் ஒரு




படத்தை முழுமையாக முடித்து (அதுவும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களை கதாநாயகனாக நடிக்க வைத்து) ரிலீஸ் செய்து வெற்றிப்படமாகக் கொடுக்க, ஒருவரால் முடியும் என்றால் அது மகத்தான சாதனை தானே!

எம்.ஜி.ஆருக்கு அப்போது அரசியல் பணிகள் வேறு. அப்படி இருக்க இரவுபகலாக பத்தே நாட்களில் படப்பிடிப்பை முடித்து பதினோராவது நாள் டப்பிங், பின்னணி இசைச் சேர்க்கை என்று முடித்துவிட்டு பன்னிரண்டாவது நாளில் படத்தை வெளியிட்டு விட்டார் தேவர்.

எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா, ஜெமினி கணேசன் என்று பிரபல நட்சத்திரங்கள் நடிக்க வெளிவந்த முகராசி படத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது "இவ்வளவு குறுகிய காலத்தில் ஒரு தமிழ்ப் படம் - அதுவும் எம்.ஜி.ஆர். படம் - வெளிவந்ததே இல்லை" என்று குறிப்பிடுகிறார் ஜெயலலிதா.

"பிட்டிலஸ் த்ரீ" என்ற ஆங்கிலப் படத்தை தழுவி எடுக்கப்பட்ட படம் இது.

பன்னிரண்டே நாட்களில் வெளியான இந்தப் படத்துக்கு இசை அமைப்பது என்பது மிகப்பெரிய சாதனை.

பாடல்களில் -

"தண்ணீர் என்னும் கண்ணாடி" என்ற கதாநாயகியின் அறிமுகப் பாடலைப் பாடியவர் பி.சுசீலா என்று சொன்னாலே போதும். பாடலின் தரத்தைப் பற்றிச் சொல்லவேண்டியதே இல்லை.

"எனக்கும் உனக்கும் தான் பொருத்தம்" - டி.எம்.எஸ். - பி.சுசீலா. இன்றளவும் நிலைத்து நிற்கும் டூயட்.

"உண்டாக்கி விட்டவர்கள் ரெண்டு பேரு" - டி.எம்.எஸ்.

படமும் வெற்றி பெற்றது. அந்த சந்தோ'த்தில் எம்.ஜி.ஆரை வைத்து தனது அடுத்த படத்தை ஆரம்பித்தார் தேவர்.

இசை.. கே.வி.மகாதேவன் அல்லாமல் வேறு யார்?

இசையமைத்த ஒரு பாடலின் அமைப்பில் மனதைப் பறிகொடுத்த சின்னப்பா தேவர் அந்தப் பாடல் காட்சியை வித்தியாசமாகப் படமாக்க வேண்டும் என்று நினைத்தார்.

எம்.ஜி.ஆரை அதுவரை ரசிகர்கள் காணாத வேடத்தில் திரையில் காண்பிக்க வேண்டும் என்று நினைத்தார் அவர்.

அந்தப் பாடல் காட்சியில் எம்.ஜி.ஆர் எப்படித் தோன்றவேண்டும் என்று தீர்மானித்தவர் அந்த முடிவை எம்.ஜி.ஆரிடம் சொன்னதும்...

அதிர்ந்து போனார் எம்.ஜி.ஆர்.

(தொடரும்)




# வலையில் கிடைத்தவை...

## அரசியல்கூடங்களாக மாறியுள்ள பள்ளிக்கூடங்கள்

வடமாகாணத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் இப்பொழுது அரசியல் கூடங்களாகியுள்ளன.

இது ஒரு விசக்காய்ச்சலைப் போல எல்லா இடங்களிலும் ஒரு குறுகிய காலத்தில் பரவியுள்ளது.

வடமாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட கையோடு தொடங்கிய இந்த விசக்காய்ச்சல் இப்பொழுது வடமாகாண சபையின் நிர்வாகம் செயற்படத் தொடங்கிய பிறகு உச்சத்துக்கு வந்து முத்திப்போயிருக்கிறது.

இதனால், எல்லாப் பாடசாலைகளிலும் ஆசிரியர்களில் ஒரு அணி எதற்கெடுத்தாலும் அரசியலுக்கூடாகவே எல்லாத்தையும் செய்ய முற்பட்டுக்கொண்டிருக்கும் போக்கு உருவாகியுள்ளது.

பாடசாலைகளில் மாணவத் தலைவர் தெரிவு தொடக்கம் பரிசளிப்பு விழாவை நடத்துகின்ற முறை வரையில் எல்லாம் அரசியல் ரீதியாகத்தான் நடக்கிறது.

மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பு எல்லாவற்றிலும் ஆளுநர் தலையிட்டுக் கொண்டிருக்கின்றார் என்று சொல்லி, விமர்சனம் செய்த பத்திரிகைகளும் கல்விப் புலத்தினரும் இப்பொழுது இதற்கெல்லாம் என்னதான் சொல்லப்போகிறார்கள்?

பாடசாலை நிகழ்வுகளில் அரசியலைக் கலக்கக்கூடாது என்று சொல்லுகின்ற இதே ஆசிரியர்கள் மாணவர்களை தங்களுடைய விருப்பத்திற்குரிய அரசியல் வாதிகளுக்கு சார்பாக நடக்கவைக்கிறார்கள்.

இதைப்பற்றி யாராவது கதைக்கப்போனால், பாடசாலைகளில் அரசியல் கலப்பதை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் அரசியலுக்குச் சார்பாக நடக்கக்கூடாது என்று கரடி விடுகிறார்கள், காதில் பூ வைக்கிறார்கள்.

அண்மையில் ஒரு பாடசாலையில் நூல் வெளியீடு நடந்தது அதற்கு அழைக்கப்பட்டவர்களைப் பார்த்தால் அத்தனையும் தமிழரசுக்கட்சியின் ஆட்கள்.

இது சுத்தமான அரசியல் தெரிவுதானே என்று ஆதாரத்துடன் கேட்டபோது இது மாணவர்களின் தெரிவு என்று ஒரு ஆசிரியர் பதில் சொன்னார்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களையும் பிரதம விருந்தினர்களையும் உங்களுக்குத் தெரியுமா? என்று ஐந்து மாணவர்களிடம் கேட்டேன்.

அவர்களுக்கு எவரையுமே தெரிந்திருக்கவில்லை. அதிலும் இப்படி அழைக்கப்பட்டவர்களில் மூன்று பேர் அந்தப் பாடசாலையுடன் ஒருபோதுமே தொடர்பில்லாதவர்கள் அந்த நிகழ்வுக்கு வரும் வரையில் அவர்களுக்கு அந்தப் பாடசாலையே தெரியாது.

இவர்களைத் தெரிவு செய்தது மாணவர்களல்ல, ஆசிரியர்கள் தான். தங்களுடைய சொந்த விருப்பத்துக்கு ஏற்றமாதிரித் தெரிவுகளைச் செய்துவிட்டு, அதற்கான பொறுப்பை எடுக்காமல், காரணத்தைச் சொல்ல முடியாமல் மாணவர்களுடைய தலையில் பழியைப் போட்டு, உருட்டி விடும் கோழைத்தனம் வேண்டியிருப்பது ஏன் இந்த ஆசிரியர் குழாத்தினருக்கு?

இன்னொரு சம்பவம், பாடசாலையில் அங்கே பரிசளிப்பு நிகழ்வு நடக்கவிருந்தது. அந்த நிகழ்வுக்கு யாரை அழைக்கலாம் என்ற வாதப்பிரதி வாதங்கள் நடந்து கொண்டிருந்தன.

பாடசாலையின் வளர்ச்சிக்கு பல வகையான உதவிகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரும் அரச தரப்பும் செய்திருந்தது.

ஆனால், பாடசாலையின் ஆசிரியர் குழாமில் அதிகமானவர்கள் தமிழரசுக்கட்சியின் ஆதரவாளர்கள். அதிபர் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறினார்.

இறுதியில் அரசியல் தரப்பில்லாமல் நிகழ்வை நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

அப்படியென்றால் யாரை அழைப்பது?

பழைய மாணவர்கள் இரண்டு பேரை முதன்மை விருந்தினராகவும், பிரதம விருந்தினராகவும் அழைக்கலாம் என்று தீர்மானித்தார்கள்.

அப்பிடி அழைக்கப்பட்டவர்கள் வேறு யாருமல்ல, பிரதேச சபை உறுப்பினர்கள் இருவரும் தமிழரசுக்கட்சி ஆட்கள்.

எப்படியிருக்கிறது கலப்படமில்லாத அரசியல்?

இது மாதிரியான நடவடிக்கைகள் எல்லாம் எங்கே போய் முடியும் என்பதற்கு வரலாற்றில் ஏராளம் உதாரணங்கள் உண்டு.

**- நியூ ஜப்னா**

## நெடுமாறன், வைகோ, சீமான் ஆகியோருக்கு மட்டுமே தெரிந்தது

1987 ஜுலை 25ஆம் திகதி டில்லி அசோகா ஹோட்டலில் இந்திய அதிகாரிகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரதியொன்றை முதன் முதலில் பிரபாகரனிடம் கொடுத்தார்கள். தூதரக அதிகாரி பூரி, ஒப்பந்தத்திலுள்ள ஒவ்வொரு பகுதியையும் படித்துக்காட்ட, அன்ரன் பாலசிங்கம் அதை மொழி பெயர்த்தார்.

இது கிட்டத்தட்ட ஒன்றேகால் மணிநேரம் நடைபெற்றது.

ஒப்பந்தம் பற்றிக் கலந்தாலோசிக்க தங்களுக்கு அவகாசம் தேவை என்று பிரபாகரன் கூறியதில், "பின்னர் வருகிறோம்" என்று கூறிவிட்டு, பூரியும் மற்றையவர்களும் புலிகளை அந்த அறையில் ஆலோசனை நடத்த விட்டுவிட்டு வெளியே சென்றார்கள்.

மதிய நேரம், மீண்டும் இந்திய அதிகாரிகள் அந்த அறைக்கு வந்தார்கள். "ஆலோசனை செய்து என்ன முடிவுக்கு வந்திருக்கிறீர்கள்"

"ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது"

இதைக் கேட்டதும் பூரி திகைத்துப் போய்விட்டார்.

"ஒப்பந்தத்தில் இருப்பவை அனைத்தும் உங்களுக்குத் தெளிவாக விளக்கியிருக்கிறேன்"

"அதுதான் சொல்கிறோம். ஒப்பந்தம் விடுதலைப் புலிகள் அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்று"

"இதைவிட உன்னதமான தீர்வு ஒன்று ஈழத் தமிழர்களுக்குக் கிடைக்கமுடியாது என்பது எங்கள் எண்ணம்"

"கிடைக்கும் என்பது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீர்மானமான முடிவு. நீங்கள் கொடுக்கும் தீர்வை விட உன்னதமான தீர்வு ஒன்றை எமது மக்களுக்கு எப்படி பெற்றுக் கொடுப்பது என்று எமது தலைவருக்கு தெரியும்" என்றார் பாலசிங்கம்...

"இந்தியா பெற்றுக் கொடுக்கும் தீர்வில், இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து, நீங்களே மாநில அரசை நடத்தும் அதிகாரம் கிடைக்கிறதே"

"அது எங்களுக்குத் தேவையில்லை. எமது தலைவரால் அதைவிட பெரிதான ஒன்றை பெற்றுக் கொடுக்கும் வல்லமை உள்ளது"

"இதைவிட பெரிய தீர்வா? அது என்ன"

"தனி ஈழம். எமது மண்ணை நாங்களே ஆட்சி செய்யும் தனிநாடு"

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இப்படிக் கூறியதும் தூதரக அதிகாரி பூரி சிறிது நேரம் பேச்சு வராமல் நின்றிருந்தார்.

"இதுதான் உங்கள் முடிவு என்றால், அதை எனது மேலதிகாரியிடம் கூறுகின்றேன். நான் ஒரு அதிகாரிதான். எனது மேலதிகாரியும், ஆட்சியில் இருப்பவர்களும் என்ன செய்வது என்று முடிவு எடுப்பார்கள்" என்றார் பூரி.

அந்த அறையில் இருந்து வெளியேற முயன்ற அவர், ஒரு கணம் தயங்கியபின் திரும்பி கேட்டார்: "இப்போது உங்களுக்கு (இலங்கை தமிழர்களுக்கு) இலங்கையில் எந்த அதிகாரமும் கிடையாது. நாங்கள் இரு மாகாணங்களை ஒன்றிணைந்து, மாகாண அரசு ஒன்றை உருவாக்கி, அதன் அதிகாரத்தை தருவதாக கூறுகிறோம். ஏற்றுக் கொள்ளப்பட முடியாது என்கிறீர்கள். உங்கள் மக்களுக்கு கிடைக்கவுள்ள இந்த அதிகாரத்தை, அவர்களது பிரதிநிதிகள் என்று கூறி மறுக்கிறீர்கள்.

நாளைக்கே வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட மாகாணசபை அதிகாரமும் இல்லாமல், உங்களால் தனி ஈழமும் பெற்றுக் கொடுக்க முடியாமலும் போனால், உங்கள் மக்களுக்கு என்ன பதில் கூறுவீர்கள்?"

இதற்கு பிரபாகரன் தமிழில் கூறிய பதிலை, அன்ரன் பாலசிங்கம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து கூறினார். "அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் கிளம்புங்கள்"

இதற்குமேல் எதுவும் பேசாமல், அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார் பூரி.

இந்தியாவால் உருவாக்கி கொடுக்கப்பட்ட வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண அரசை, விடுதலை புலிகளே கலைக்க வைத்தார்கள். அதை விட உன்னதமான ஈழத்தை பெற்றுத் தருவதாக கூறி, யுத்தத்தை தொடர்ந்தார்கள். யுத்தம் முடிந்தது.

"நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறிய பிரபாகரனின் தற்போதைய இருப்பிடம், நெடுமாறன், வைகோ, சீமான் ஆகியவர்களுக்கு மட்டுமே தெரிந்துள்ளது.

"வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண அரசை டில்லியின் வற்புறுத்தல் காரணமாக கொடுத்தோம். இனி அதெல்லாம் கொடுக்க இயலாது" என்று கூறிவிட்டது இலங்கை அரசு.

**- ரிஷியின் தளத்திலிருந்து**

## அரசியல் கோமாளிகளை விட்டு விலகுங்கள் மக்களே!

தேர்தலில் ஜனநாயக முறைப்படி உறுப்பினர்களை மக்கள் தேர்வு செய்ததின் நோக்கம் மக்களின் தேவைக்களை நிவர்த்தி செய்வதற்காகவே அன்றி மீண்டும் யுத்தம் செய்வதற்காக அல்ல.

அப்படியாயின் இவர்கள் தன்னாட்சி பெறுவோம், அரசைப் பணிய வைப்போம், மகிந்தாவை சர்வதேச நீதிமன்றில் ஏற்றுவோம் என்று சொல்லும் மாவை சேனாதிராஜா, சிறிதரன், சிவாஜிலிங்கத்தின் வீண் பேச்சுகளை அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள்? இவை எவ்வளவு பாரதூரமானது என்று தமிழ் மக்கள் சிந்திக்கவேண்டும். மீண்டும் ஒரு பிரச்சினை வருமாயின் இந்த அரசியல் கோமாளிகளை எல்லாம் நாட்டில் காணமுடியாது. மீண்டும் மக்களுக்கு இழப்புகளை ஏற்படுத்துவார்களானால், இந்தத் தமிழ் தலைவர்கள் நட்ட ஈடு கொடுக்க மக்கள் தங்கள் பலத்தை ஐக்கியப்படுத்திக் கேட்கவேண்டும். இதுவரைகாலமும் எதுவித தகுதியுமில்லாமல் மக்களை ஏமாற்றியது பயமுறுத்தியது போதும்.

மீண்டும் யுத்த சூழலை உருவாக்கி மக்களின் இயல்பு வாழ்வுக்கு குந்தகம் விளைவிக்கும் இவர்கள்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?

தாம் வாழ மரணங்களையும் ரணங்களையும் உருவாக்கிவிட்டு மனிதர்களின் மரணங்களில் சுகத்தையும் சொத்துக்களையும் சேர்த்தவர்கள் அடுத்தவன் வாழ வழிவிடுவார்களா? சிந்தியுங்கள் மக்களே?

பேச்சு நடத்தித் தீர்வை எடுத்துத் தரமுடியாத அரசியல் கோமாளிகளான தமிழரசியல்வாதிகள் பொறுப்பற்ற விதத்தில் நடப்பதை தண்டிக்க மக்கள் முன்வரவேண்டும். அல்லது நீதிமன்றத்தை நாடி இவர்களின் உறுப்புரிமையை தடைசெய்வதற்கும் மக்கள் தயாராகவேண்டும்.

**- ஜோசேப் மகேந்திரன் (சலசலப்பு)**

## கல்லறையில் நல்லவர்கள்

ஒருமுறை ஒரு தாயும், அவரது ஏழு வயது மகனும் அவர்கள் வீட்டிற்கு அருகிலிருந்த கல்லறைத் தோட்டத்திற்குச் சென்றனர்.

கல்லறைத் தோட்டத்திற்கு அந்தச் சிறுவன் அப்போதுதான் முதல் முறையாக செல்கிறான்.

அவனது தாய் ஒரு குறிப்பிட்ட கல்லறையை நோக்கி நடந்து சென்று அங்கே அமர்ந்து கொண்டார்.

அந்தச் சிறுவனுக்குக் கல்லறை மைதானத்தை முழுமையாகச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை ஏற்பட்டது. அவன் ஒவ்வொரு கல்லறையாகச் சென்று அதில் எழுதப்பட்டிருந்த வாசகங்களைப் படித்துக் கொண்டிருந்தான்.

இப்படி கல்லறை முழுக்கச் சென்று படித்து விட்டு, தன் தாயிடம் திரும்ப வந்து, "அம்மா, இங்கிருக்கும் அனைத்துக் கல்லறையிலும் நல்லவர்கள் என்றே எழுதியிருக்கிறதே! மோசமானவர்களை எல்லாம் எங்கே புதைப்பார்கள்?" என்றான்.





அகில இலங்கை இந்துமா மன்றத்தின் நாவலர் விழா அண்மையில் மட்டக்களப்பு இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன் மங்கள விளக்கேற்றுவதையும், இந்து ஒளி சஞ்சிகை வெளியிட்டுவைக்கப்படுவதையும், கலந்து கொண்ட மக்களையும் காணலாம்.


# நிகழ்வுகளின் பதிவுகள்....



யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் கல்லூரி அதிபர் மங்களவிளக்கேற்றுவதையும், விருந்தினர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், மாணவிகளின் கலை நிகழ்வையும் காணலாம். (48)



அல்கதீஜா முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா அண்மையில் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மாணவர்கள் பாட்டிசைப்பதையும் விருந்தினர்கள் முன்பள்ளி மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (105)



கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசில் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் பாடசாலை அதிபர் திருமதி கௌ. பரந்தாமன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் உரையாற்றுவதையும், வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் மாணவி யொருவருக்குப் பரிசளிப்பதையும் காணலாம். (137)

# வடக்கு கல்வி அபிவிருத்திக்கான நிதி

# திறைசேரிக்கு திரும்பும் அபாயம்

## அதிகாரிகளின் உறக்கம் கலைவது எப்போது?

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்விக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்வதற்கு முன்னர் தற்போதைய மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவியில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும். இல்லையேல் கல்விப்புலம் சார்ந்து, சமூகம் சார்ந்து அனைவர் மத்தியிலும் விழிப்பை ஏற்படுத்த துண்டுப்பிரசுரங்கள் மூலம் அனைத்தையும் அம்பலப் படுத்தப் போவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

பாடசாலைகளுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதிகளின் செலவீனங்கள் தொடர்பாக அதிபர்களையும், ஆசிரியர்களையும் துளைத்தெடுக்கின்ற மாகாணக் கல்வித் திணைக்களம், தனக்கென ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பாக எந்தவிதமான திட்டங்களும் இல்லாமல் நிதியானது திரும்பிச் செல்லும் அளவிற்கு அசமந்தமாக இருந்தமை எமது சமூகத்திற்குச் செய்த மிகப்பெரும் துரோகமாகும்.

அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டிய பெருமளவிலான நிலுவைகள் மற்றும், பாடசாலை அன்றாட தேவைகளுக்குத் தேவையான நிதிகளைக்கூட இதுவரை வழங்காமல் இருந்து விட்டு வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை திரும்பிச் செல்ல விடுவது அல்லது துஷ்பிரயோகம் செய்வது மன்னிக்கமுடியாத செயலாகும்.


அதிபர்கள், ஆசிரியர்கள் கோரிய இடருதவிக் கடன்கூட இதுவரை முறையாக வழங்கப்படவில்லை.

கூட்டுத் திட்டங்கள் எதுவும் இல்லாமல் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஒரு இடத்திலும், மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் ஒரு இடத்திலும், மாகாணக் கல்வி அமைச்சர் இன்னோர் இடத்திலும் இருந்து தொலைபேசியில் பேசி எதனையும் சாதித்துவிட முடியாது. வடமாகாணக் கல்வித் துறை சார்ந்த அனைவரும் ஒரே இடத்தில் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாததுதான் இத்தனை தவறுகளுக்கும் காரணம். எங்கு என்ன நடக்கிறது. யாருக்கூடாக நடக்கிறது. என்பதெல்லாம் எவருக்கும் தெரியாத மூடுமந்திரங்களாகவே இருக்கின்றன.

கதிரைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக திட்மிடப்படாத செலவீனங்கள் பல நடைபெறுகின்றன. முதல் நாள் கூட திட்டமிடப்படாமல் ஒரு மணித்தியாலத்தில் முடிவெடுத்து செலவு செய்யும் அளவிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப் படுவதாக அறியப்படுகின்றது.

இவை எல்லாம் எமது குழந்தைகளின் எதிகாலத்திற்கு வைக்கப்படும் ஆப்பு! என்றே கருதுகின்றோம். என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாம் நண்பர்கள் அமைப்பால் பொதுக்கிணறு புனரமைப்பு



யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள பொதுக்கிணறு 'நாம் நண்பர்கள்' அமைப்பினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

நாளாந்தம் பலர் பயன்படுத்தும் பழமையான கிணறு என்பதாலும், இதன் முன் பகுதி பாதுகாப்பாக இல்லாமையாலும். வீதியிலுள்ள அழுக்குகள் கிணற்றினுள் செல்லும் என்பதாலும் நாம் நண்பர்கள் அமைப்பினர் தாமாக முன் வந்து இக் கிணற்றை புனரமைத்து வருகின்றனர்.

கிணற்றின் முன் பக்க கட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு, கால்நடைகள் நீர் அருந்துவதற்கேற்ற வகையில் நீர்த்தொட்டி ஒன்றும் புதிதாக அமைக்கப்படுகின்றது.

அத்துடன் வெளியிலிருந்து வரும் குப்பைகள் கிணற்றினுள் செல்வதைத்தடுக்கும் விதத்தில் மூடி ஒன்றும் புதிதாக செய்து பொருத்தப்பட்டுள்ளது.

லண்டனில் வசிக்கும் புலம்பெயர் தமிழரான சண்முகம் குருபரன் இதற்கான முழுமையான அனுசரணையினை வழங்கியுள்ளார்.

முழுமையான புனரமைப்பு வேலைகளையும் 'நாம் நண்பர்கள்' அமைப்பினைச் சேர்ந்தவர்களே மேற்கொண்டு வருகின்றனர்.

புனரமைக்கப்பட்டு நிறைவடைந்ததும் பொதுக் கிணறு மக்கள் பாவனைக்கு மீள கையளிக்கப் படும் என 'நாம் நண்பர்கள்' அமைபினர் தெரிவித்தனர்.

# கோலாகலமாக நடைபெற்றது இந்துமாமன்றத்தின் நாவலர் விழா




அகில. இலங்கை இந்து மா மன்றம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் அனுசரணையுடன் நடாத்திய நாவலர் விழா நேற்று முன்தின்ம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் இரண்டு அமர்வுகளாக நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள இந்துமாமன்றத்தின் யாழ். பணிமனை மண்டபத்தில் இடம் பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் செயலரும் கல்வி அமைச்சின் ஓய்வுநிலை மேலதிகச் செயலருமாகிய உடுவை எஸ்.தில்லைநடராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் இ.குமாரவடிவேல் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்

காலை அமர்வின்போது அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆற்றினார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன், யாழ். பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர். தொடர்ந்து வைத்திய கலாநிதி ப.நந்தகுமாரின் ஒழுங்கமைப்பில் இளைஞர் ஆய்வரங்கு இடம்பெற்றது. மாலை அரங்கு பி.ப. 3.30 மணிக்கு இடம்பெற்றது. இவ்வரங்கில் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நாவலர் தருமத்தின் ஆணி என்ற பொருளில் கவியரங்கம் நடைபெற்றது. தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவிகள் வழங்கிய பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெற்றது. விடைக் கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா நன்றியுரை நல்கினார். (90,48,63)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

தலைநகரை அண்மித்த பிரதேசங்களில் உள்ள முன்னணித் தொழில் நிறுவனங்களில் 18,000-48,000 வரை உயரிய சம்பளத்துடன் கூடிய வேலை வாய்ப்புக்கள் பலவற்றிற்கு 17-50 வயது ஆண், பெண் உடனடியாக தேவை. பிஸ்கட், யோகட், குளிர்பானம், ஜேம், விமான நிலையம், துறைமுகம், வெல்டிங், பிளம்பிங், பாதுகாப்பு உத்தி யோகத்தர், ஹோட்டல், வாகன சாரதி, பெயிண்டர் மற்றும் கல்வி தகைமைகளுக்கான வேலைவாய்ப்புக் களையும் பெற்றுக்கொள்ள இப்போதே செயற்படுங்கள் நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் இணைந்து பணி புரியலாம். தொடர்புகளுக்கு 0771116770, 0779096263,

---

வவுனியா ஏ9 வீதி புளியங்குளம் என்னும் இடத்தில் அமைந்துள்ள எமது பல்பொருள்வாணிபத்திற்கு உதவியாளராக பணிபுரியக்கூடிய பெண் ஊழியர் தேவை. வவுனியாவை அண்மித்தவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும், ஊதியம் மாதாந்தம் 15,000 வழங்கப்படும் தொடர்புக்கு 0779345711.

---

ஐரோப்பிய பாதுகாப்பு நிறுவனத்திற்கு சொந்தமான இலங்கையில் அமைந்துள்ள எமது பாதுகாப்பு நிறுவனத்திற்கு பாதுகாப்பு அதிகாரிகள் (ஆண்,பெண்) இணைத்துக் கொள்ளப்படுவர் வயது 18-65 ரூ 35,000இற்கு மேல் சம்பளம் அம்பாறை, அக்கரைப்பற்று, திருக்கோவில், சம்மாந்துறை, கல்முனை, மூதூர், மட்டக்களப்பு, அநுராதபுரம், பரந்தன், கிளிநொச்சி, யாழ்.ப்பாணம், கைதடி, வெலிமடை, நுவரெலியா, ஹட்டன், தலவாக்கலை, கண்டி, மாத்தளை, யக்கல, நிட்டம்புவ, இரத்தினபுரி, அவிசாவளை, ராஜகிரிய மற்றும் கொழும்பு சுற்று வட்டாரத்தில் உணவு தங்குமிடம் வழங்கப்படும். தொடர்புக்கு: 0773575557.

---

விமானத்தில் வேலை செய்ய விருப்பமா? இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண்,பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப் படும் (சிங்களம் அவசிய மில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

---

காபன் உற்பத்தி தொழிற்சாலைக்கு 18-55 வயதுக்கு இடைப்பட்ட ஊழியர்கள் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு அடிப்படை சம்பளம் 25,000 தனதுதிறமைக்கு ஏற்ப 35,000 மேல் பெறமுடியும் அடையாள அட்டையுடன் வரவும் தொடர்புக்கு 0719797708, 0719797704.

---

வேலைவாய்ப்பு எமது நிறுவனம் உணவுப்பொருள் உற்பத்தியில் பிரசித்த நிறுவனமாகும் ராஜகிரிய மற்றும் பாதுக்கையில் அமைந்துள்ள எமது தொழிற்சாலை களஞ்சியசாலைக்கு வேலையாட்கள், வாகன ஓட்டுனர்கள் உடன் தேவை. உயர் சம்பளம் மேலதிக வேலை நேரம் (OT) உணவு, தங்குமிட வசதிகள் இலவசம், திறமையான வேலையாட்களுக்கு விசேட கொடுப்பனவுகளும் வழங்கப்படும். (பொருத்தமானவர்களுக்கு மட்டும்) மாதாந்த சம்பளம் 25,000இற்கு மேல் பெறலாம். வயது 18-30 இடைப்பட்ட ஆண்கள் கிழமை நாட்களில் சமுகமளிக்கவும், தொடர்புக்கு 0770116577.

# வசந்தம் வானொலிக் குழுமத்தால் முல்லை மாணவர்களுக்கு உதவி


(முல்லைத்தீவு)

வசந்தம் வானொலியின் வசந்த நிலாவின் தலையெழுத்து நிகழ்ச்சிக் குழுமத்தினரால் முல்லைத்தீவு பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வசந்தம் வானொலியின் வசந்த நிலா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் பிரதாப் தலைமையில் நேற்று முன்தினம் முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் இந்நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

இதில் தலையெழுத்து நிகழ்ச்சியில் தொடர்பு கொண்டு தங்களை உறுதிப்படுத்திய மாணவர்களுக்கு 1 வருடத்துக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு இவ் உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் வசந்தம் வானொலி பொது முகாமையாளர் கிருபா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு இக் கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கி வைத்தார். இதில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (40)





யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு இரண்டாம் கட்டமாக 37 மோட்டார் சைக்கிள்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் வழங்கி வைக்கப்பட்டன. இதனை யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன வழங்கி வைத்தார்.

(நி,25)

# மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை உடைத்தெறியமாட்டேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இந்த நாட்டு மக்கள் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை உடைத்தெறியும் வண்ணம் செயற்பட இடமளிக்க மாட்டேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒழுக்க விழுமியமுள்ள சமூகம் ஒன்றை ஏற்படுத்தி, அனைவருக்கும் ஒற்றுமையாக வாழ்வதற்கு ஏற்ற பாதுகாப்பான நாடு தற்பொழுது உருவாகியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை மாத்தளை மாவட்டத்தில் ரத்தொட்ட பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

இந்த நாட்டு இளைஞர்கள் பெற்றோரை மதித்து, முதியோருக்கு மரியாதை செய்து, விகாரை, பள்ளிவாசல், கோவில்களுக்கு செல்லும் இளைஞர்களாக மாறவேண்டும்.

இந்த நாட்டில் தீவிரவாதத்தை ஒழித்து, நாட்டை அபிவிருத்தி செய்தது போன்று, ஒழுக்க விழுமியமுள்ள சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்ப இந்த அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# ரனில் இனி தலைதூக்க முடியாது

# ஐ.தே.க. இப்போது சந்திரிக்கா வசம்

## கட்சி தாவிய திஸ்ஸ கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசார இயந்திரம் சுவிற்ச் ஒப் செய்யப்பட்டுள்ளது. அதன் சாவியைத தேடி எடுக்கவே மைததிரிபால சிறிசேனவுக்கு பல மாதங்களாகும் என்று தெரிவித்து அரசு பக்கம் தாவிய ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ரணில் இனி தலை தூக்க முடியாது என்றும் அனைத்து முடிவுகளையும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவே எடுக்கிறார் என்றும் தெரிவித்தார்.

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் பின்னணியில் சர்வதேச சக்திகளே உள்ளன. மைத்திரியின் வெற்றி இலங்கைக்கு அல்ல சர்வதேசத்துக்கே தேவை என்றார். மேலும் ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின வெற்றியை எவராலும் தடுக்க முடியாது என்றும் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,



இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியால் வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியவில்லை. அந்தளவுக்கு கட்சி வங்குரோத்து அடைந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்த தற்போது மரண வீடாகியுள்ளது என அங்கு சேவையாற்றுகின்றவர்கள் கூறுகின்றனர். ஐ.தே.கவின் தேசியத் தலைவர் சுவரில் சார்த்தப்பட்டுள்ளார்.

அவரால் இனிமேல் தலை தூக்க முடியாது. ஏனெனில் அனைத்து முடிவ்களையும் சந்திரிக்கா குமாரதுங்கவே எடுக்கின்றார். பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெறவேண்டும் என்பது இலங்கையர்களின் நோக்கம் அல்ல. அது சர்வதேசத்தினரின் நோக்கமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுடன் மைத்திரி தனித்தனியாக இணக்கப்பாட்டு ஒப்பந்தம் செய்துள்ளார். வடக்குக்கு பொலிஸ், காணி உள்ளிட்ட நிர்வாக அதிகாரம் வேண்டும் என்று கூட்டமைப்பு கேட்கின்றது. இவ்வாறான நிலையில், கூட்டமைப்புடன் செய்துகொள்ளப்பட்ட இணக்கப் பாட்டு ஒப்பந்தம் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இவற்றை அவதானித்துப் பார்க்கும்போது பொது எதிரணியின் பயணம் சிறந்ததாக இருக்கும் என எனக்குத் தோன்றவில்லை.

அதனால்தான் அரசில் இணைய முடிவெடுத்தேன். ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவது உறுதியாகும். மூன்றாவது முறை அல்ல, நான்காவது முறையும் அவருக்கு சவால்விட எவரும் இல்லை - என்றார்.

# இலங்கையில் உள்ள பாக்.தூதரகம்

# இந்தியாவுக்கு எதிராக சதிவலை பின்னுகிறது

## இந்திய புலனாய்வு பணியகம் குற்றப்பத்திரிகை

(கொழும்பு)

தமிழ்நாட்டுக்கு கடல் மார்க்கமாகத் தீவிரவாதிகளை அனுப்பி சென்னை, பெங்களூரில உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களைத் தாக்குவதற்கு கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகம திட்டமிட்டிருந்தது என இந்திய தேசிய புலனாய்வுப் பணியகம் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் தெரிவித்துள்ளது.

அத்துடன் தீவிரவாதிகளை படகுகள் மூலமாக இராமேஸ்வரம் - தூத்துக்குடி பகுதியில் இறக்கி விடவும் திட்டமிட்டிருந்தனர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்பகட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக சென்னைககுள் அனுப்பபட்ட இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்ட பின்னரே இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் விஸா பிரிவில் பணியாற்றிய அமீர் சுபைர் சித்தீக் என்பவரும் அவரது உயரதிகாரியான பொஸ் என்பவரும் சென்னையிலுள்ள அமெரிக்க தூதரகத்தை வேவு பார்ப்பதற்காக இலங்கையை சேர்ந்த முகமட் ஹுசைன் என்பவரை அனுப்பினர். ஹுசைனுக்கு சென்னையிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்தில் வெடிகுண்டுகளை வைக்குமாறு பணிக்கப்பட்டது. அவர்கள் அமெரிக்கத் துணைத் தூதரகத்தை திருமண மண்டபம் என சங்கேத மொழியில் அழைத்தனர்.

தவிர இலங்கையில் ஹுசைனை சந்தித்த பாகிஸ்தான் அதிகாரிகள் இருவரும் அமெரிக்கத் துணைத் தூதரகத்திற்கு பாதுகாப்பு வழங்கும் பொலிஸாரின் நடவடிக்கைகளை புகைப்படம் எடுக்குமாறும், பாதுகாப்பு அதிகாரி ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்தி முக்கிய விவரங்களைப் பெறுமாறும் உத்தரவிட்டனர் எனவும் குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# அனர்த்த தணிப்பு செயற்றிட்டம் அதிகாரிகளுக்கு விசேட பயிற்சி


மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான பயிற்றுவிக்கும் முறைமைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் ஆரமபமானது.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள கிறீன் கார்டன் விடுதியில் ஆரம்பமான இப் பயிற்சிப் பட்டறை தொடர்ந்து இரண்டு நாட்கள் நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வில், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன், ஒக்ஸ்பார்ம் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஆசாத் அகமட், திட்ட முகாமையாளர் எஸ்.ரகுராமமூர்த்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அனுசரணையினை ஒக்ஸ்பார்ம் நிறுவனமும், பயிற்சிக் கற்கை நெறியினை நெசட் நிறுவனமும மேறகொள்கின்றன.


வளவாளர்களாக டப்ளியூ.துமிந்த வீரசிங்க, எஸ்.பாலசுப்பிரமணியம், ஏ.சசிதரன், எஸ்.ரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமுதாயமட்ட அனர்த்த, ஆபத்துக் குறைப்பு நடவடிக்கைகளை உள்வாங்குவதன் ஊடாக சமூகத்தின் அனர்த்த மீள்திறனைக் கட்டியெழுப்புதல் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நெறி நடைபெறுகிறது.

# கூகிள் மொழி பெயர்ப்பில் இணைந்தது சிங்கள மொழி





Google Translate என்று சொல்லப்படும் கூகிளின் மொழி பெயர்ப்பு சேவை தற்போது எமது சகோதர மொழியான சிங்கள மொழிக்கான மொழி பெயர்ப்பு சேவையை அறிமுகம் செய்துள்ளது.

இதன்மூலம் அரபு, சீனம், ஆங்கிலம், தமிழ், இந்தி ஜப்பானிஸ் உட்பட 89 மொழிகளில் மொழிபெயர்க்க முடியும்.





கடந்த ஆண்டு 2011 யூன் மாதம் தமிழ் மொழியை Google Translate இல் இணைத்தமை குறிப்பிடத்தக்கது

25.  இவ்வாறான எட்டு தரையோடுகளில் உள்ள பூக்கள் எத்தனை?

..............................................

(07) மிகச்சரியான விடையை தெரிவு செய்க


26. வேறுபட்ட உருவின் கீழ் கோடிடுக



27. 3 x 5 கட்டத்தில் உள்ள செய்கையின் விடை யாது?
1) 15　　2) 18　　3) 21

28. 100g = 150 g ☐ = 400g கட்டத்தில் வரவேண்டிய நிறை யாது?
1) 100g　　2) 200g　　3) 150g

29 ஆம் 30 ஆம் வினாவிற்கு அடுத்து வரும் உருக்களை தெரிந்து கோடிடுக



## நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 1. பழமொழி　2. முதாதேயர்　3. செம்மை + தமிழ்　4. மொழிதோன்றிய காலத்தில் இருந்து　5. புதிய　6. அது　7. காணப்படுகின்றன

(02) 1. இலக்கங்களையும்　2. முளைக்கு

(03) 1. என்னதிட்டம் ஆதவன் ஆவலோடு கேட்டான்?　2. சுத்தம் சுகம் தரும், பலம்தரும் போன்ற சொற்றொடர்கள் சுத்தத்தின் முக்கியத்துவதத்தை புலப்படுத்துகின்றன

(04) 1. எதிர்கடை வேண்டும்　2. குறுகுறுக்கும்

(05) 1. கூழானாலும்　2. ஆழம்

(06) 1. முகம்கழித்தல்　2. புண்படுத்தல

(07) 1. அடிமை　2. கைதி

(08) 1. tree　2. rabbit　3. pawpaw　4. flower

(09) 1. தயவுசெய்து இங்க வர வேண்டாம்　2. உங்களுக்கு விருப்பமா　3. முத்திரை

(10) 1. பட்டம்　2. அதோ ஆசிரியர் போகின்றார்

(11) 1. ஐயா சுடேட்ட கியா　2. அபி வதுர பொமு

(12)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. 2 | 2. 4 | 3. 2 | 4. 2 | 5. 4 | 6. 4 | 7. 4 |
| 8. 4 | 9. 2 | 10. 3 | 11. 4 | 12. 4 | 13. 3 | 14. 2 |
| 15. 2 | 16. 3 | 17. 1 | 18. 3 | 19. 1 | 20. 4 | |

(13) 1. 5m 70cm　2. 108　3. 0.1, 0.4, 0.8　4. 240.00　5. 3000ml /3 லீற்றர்　6. 8　7. 90.00　8. 120km　9. 09.　10.　11. பத்தாயிரத்து தொண்ணூற்றொன்பது　12. 10

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 3 பரீட்சை முன்னோடி- 2014

பகுதி - I
1 மணி 15 நிமி




# கல்வி முரசு



(01) சரியான விடையின் கீழ் கோடிடுக

01. ✡ + ✡ = 26　✡ இவ்வுருவின் பெறுமானம் யாது?
1) 15　　2) 13　　3) 16


02.  கட்டத்தில் உள்ள உருக்களில் அதிக தடவை வரையப்பட்ட உரு எது?
1) ✠　　2) ☯　　3) ✿

03. 100 இற்கு முந்திய எண் யாது?
1) 99　　2) 89　　3) 96

04. வருடம் ஒன்றில் உள்ள மாதங்கள் எத்தனை?
1) 12　　2) 30　　3) 24

05. 54 + 39 = ☐ வெற்றுக்கட்டத்தினுள் வரவேண்டிய எண் யாது?
1) 83　　2) 79　　3) 93

06. சமஅளவான ஆறுகம்பிகளை கொண்டு அமைக்கப்பட்டுள்ள உரு எது?




07. மே மாதம், மூன்றாம் திகதி புதன்கிழமை எனின் மே மாதம் 6 ஆம் திகதி என்ன கிழமை?
1) வெள்ளிக்கிழமை　　2) சனிக்கிழமை　　3) ஞாயிற்றுக்கிழமை

08.


| 36 | 48 | 31 | 59 | 40 |
|---|---|---|---|---|

தரப்பட்டுள்ள எண்களில் மிகச்சிறிய எண்ணில்இருந்து பெரிய எண் வரை ஒழுங்குபடுத்தினால் நடுவில் வரும் எண் யாது?
1) 40　　2) 48　　3) 36

09. அதிகளவு வட்டங்களை கொண்ட உருவை தெரிவு செய்க



10. இவ்விரு உருக்களையும் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய உரு எது?




தரப்பட்ட எண்கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்ணை தெரிவு செய்க

11. 25 — 28 — 31 — 34 — .........

1) 39 2) 38 3) 37


12.




1) 09 2) 11 3) 10

13.1kg சீனியின் விலை 80 ரூபா எனின் 2மப சீனியின் விலை யாது?
1)160 ரூபா 2) 180 ரூபா 3) 145 ரூபா


14.





இங்குள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 4 2) 5 3) 8

15. 9 □ 3 = 27 கட்டத்தினுள் வரவேண்டிய கணிதச்செய்கை குறியீடு யாது?
1) கூட்டல் 2) பெருக்கல் 3) கழித்தல்




16ஆம், 17ஆம் வினாக்களில் வேறுபடும் உருவின் கீழ் கோடிடுக


16.  2)  3) 

17.  2)  3) 

18. வாசுகிக்கு இரு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உள்ளனர். வாசுகியின் பெற்றோருக்கு எத்தனை பிள்ளைகள்?
1) 4 2) 5 3) 3

19. அதிகளவு திரவத்தை கொண்டுள்ள போத்தல் எது?

20. 

இவ்வாறான ஆறு பூச்சாடிகளில் உள்ள மொத்த பூக்கள் எத்தனை?
1) 24 2) 10 3) 20



(02) தரப்பட்டுள்ள எண்ணுக்கு முன்னும், பின்னும் வரும் எண்களை எழுதுக
01)...................25...............  02)...............39................
03)...................60..............


(03) கூட்டுக


04. 1 8 + 1 0 = ______  02. 3 5 + 4 8 = ______  03. 6 8 + 2 9 = ______  04. 3 0 + 4 2 = ______


(04) கழியுங்கள்

01.64 - 10 = ......................  02. 45 - 15 = ......................
03. 60 - 31= ......................  04. 95 - 29 = ......................

(05). கீழே தரப்பட்ட கடிகார முகங்கள் காட்டும் நேரத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக

12.  ......... மணி

13.  ......... மணி

14.  ......... மணி

(06). பொருத்தமான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக

01. பழக்கடை ஒன்றில் உள்ள 50 மாம்பழங்களில் 29 மாம்பழங்கள் விற்கப்பட்டன. எனின் எஞ்சிய மாம்பழங்கள் எத்தனை?
..............................................................................................


02.38 உடன் 13 ஐ கூட்டுக ......................................................................

17. பிற்பகல் 4மணிக்கு மைதானத்திற்கு சென்ற முரளி ஒரு மணித்தியாலத்தின் பின்னர் வீட்டை அடைந்தான். முரளி வீட்டை அடைந்த நேரம் யாது?
..............................................................................................

18. 132 இல் உள்ள 3 இன் பெறுமானம் யாது? ...................................................

19. கட்டத்தில் உள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகை யாது? ..................

| | | |
|---|---|---|
| 5 | 7 | 2 |
| | 8 | |
| 6 | 9 | 3 |

20. 

இச்சதுரத்தை புள்ளிக்கோட்டின் வழியே மடித்தால் பெறும் வடிவம் யாது?
..............................................................................................

21. தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக

18 | 36 | 12 | 25 ..............................................

22. அப்பிள் ஒன்றின் விலை 18 ரூபா எனின் மூன்று அப்பிள் வாங்க தேவையான பணம் எவ்வளவு?
..............................................................................................

23. 86 இல் உள்ள பத்துக்கள் எத்தனை? ...................................................

24. ஜனவரி மாதத்தில் உள்ள நாட்கள் எத்தனை? ...........................................



பிரிட்டிஸ் பிஸ்னஸ் கல்லூரியின் ஒளிவிழாவும் பட்டமளிப்பு விழாவும் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரிட்டிஸ் பிஸ்னஸ் யாழ்.சிட்டி கம்பஸ் சிறார்களின் நாடக நிகழ்வையும் கலை நிகழ்வையும் மற்றும் விருந்தினர் மாணவனுக்கு சான்றிதழ் வழங்குவதையும் காணலாம். (பா,51)

# அரசாங்க சேவைகளை மாற்றி அமைக்க நடவடிக்கை

'ஒரே அரசாங்கம் 2020' எனும் தலைப்பில் அரசாங்க சேவைகள் மிகவும் வினைத்திறன் வாய்ந்த வகையில் மாற்றி அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையினை ஜனாதிபதியின் செயலாளர் லலித்வீரதுங்க முன்னெடுத்து வருகின்றார்.

தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் அரச அலுவல்களை துரிதப்படுத்தல் முறையின் கீழ் நாடு தழுவிய ரீதியில் அரச செயலகங்கள் முனைப்புடன் செயலாற்றப்படவுள்ளன. இதன் முன்னோடி திட்டமாக பொதுமக்களுக்கும் ஏனைய தரப்பினருக்கும் வழங்கப்படும் சேவைகளை 2015 இல் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

எனவே அரச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள் இதற்கான திட்டத்தை தயார் செய்து எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக egov2020@presidentsoffice.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரதேச செயலகங்கள் தங்களின் கீழ் செயற்படும் பொது அமைப்புகளுக்கு கணனி வசதி, கணனிவசதிகளுடனான கற்கை போன்றவற்றிற்கு வழியமைத்து கொடுக்கலாம்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை மற்றும் உதவிகள் என்பவற்றிற்கு இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் ( ICTA) அரச துறைகளை மறுசீரமைக்கும் நிகழ்ச்சி திட்டத்தின் பணிப்பாளர் திரு.வசந்த தேசப்ரியவடன் (தொலைபேசி இல 0777584312 தொடர்பு கொள்ளலாம் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க அறிவித்துள்ளார். இதேவேளை மத்திய மாகாண

அரசின கீழ் செயற்படும் நிறுவனங்கள் தங்கள் ஈ.அரச (நு.புழள) நடவடிக்கை களை ஜனாதிபதி அலுவலகத் துடன் ஒருங்கிணைப்பு செய்யும் பொருட்டு ஒவ்வொரு அரச நிறுவனங்களில் இருந்து சிரேஷ்ட அலுவலர் ஒருவரது பெ஖ர வழங்கி உவுமாறும் கோரப்பட்டுள்ளது. (92)

# தொழில்நுட்பவியல் கல்விக்கு ஊக்கம் கிழக்கில் விசேட செயற்றிட்டம்

மட்டக்களப்பு உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவகத்தில் கற்கைகளுக்கான மாணவர் களை அதிகளவில் உள்வாங்கும் வகையில் புதிய முறையிலான உத்தி ஒன்றும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையும் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிறுவகத்தின் கல்வி இணைப்பாளர் எஸ்.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையின் போது நிறுவகத்தின் விரிவுரையாளர்கள், தற்போதைய மாணவர்கள், பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போதும், கற்ற கற்றுக் கொண்டிருக்கும், மாணவர்களுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதன் முக்கியத்துவம் குறித்து விளக்கமளிக்கப்பட்டதன் பின்னர், மாணவர்களால் பிரதான வீதியில் பஸ் மற்றும் வாகனங்களில் போக் குவரத்துச் செய்தவர்களுக்கு பிரசுரங்கள் வழங்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டன.

உயர்தரம் கற்று பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டும் அனுமதி கிடைக்காத மாணவர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்படுகின்ற உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவகத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா, உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா என 14 இற்கும் மேற்பட்ட கற்கைகள் முழுநேர, பகுதி நேரங்களாக கற்பிக்கப்படுகின்றன.

மட்டக்களப்பில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா ஆகிய கற்கைகள் எதிர்வரும் வருடம் முதல் முழுநேர, பகுதி நேரங்களாக கற்பிக்கப்படவுள்ளன. உயர் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவகத்தில் பாடநெறிகளைக் கற்பதன் மூலம் தேசிய ரீதியில் கணக்காளர் தரத்திலோ பொறியியல் தரத்திலோ தாராதரத்தினை உயர்த்திக் கொள்ள முடியும் எனவும் மட்டக களப்பு கல்வி இணைப் பாளர் எஸ்.ஜெயபாலன் தெரி வித்தார்.

விழிப்புணர்வூட்டும் பிரசாரப்படுத்தும் செயற்பாட்டின் மூலம் மாவட்டத்தின் கல்வி வளத்தினை விரிவுபடுத்தி அதிக மாணவர்கள் கற்கின்ற தன்மையை உருவாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே எதிர்வரும் ஆண்டில் உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவகத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா ஆகியவற்றைக் கற்க விரும்பும் மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்துங்கள் வலி.தென்மேற்கு தவிசாளர் கோரிக்கை

வலி.தென்மேற்கில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி பெற்றுக் கொண்ட சனசமூக நிலையங்கள் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வேலைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

இதன் மூலம் வேலைகளை பூர்த்தி செய்துகொண்ட நிறுவனங்களுக்கு ஆன நிதியை உரிய காலத்தில் பிரதேச செயலாளர் ஊடாக விடுவித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பேன். இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் (பதில்) சி.சி.மகேந்திரன் நேற்று தெரிவிரித்தார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ச.ச.நிலையங்கள் 26 இற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ்வாறு நிதி கிடைக்கப் பெற்ற சனசமூக நிலையங்களுக்கான அபிவிருத்தி பிரதேச கூட்டம் பிரதேச செயலகத்தில் செயலர் சு.முரளிதரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட தவிசாளர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களோடு ஒப்பிடுமிடத்து இவ்வாண்டுகூடுதலான சனசமூக நிலையங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக நிதி கிடைக்கப்பெற்றுள்ளது.

நிதி கிடைக்கப்பெற்ற சனசமூக நிலையங்கள் உரிய காலத்தில் உரிய மதிப்பீட்டின் படி வேலைகளை முடித்து அபிவிருத்திக்கு உதவுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

பிரதேச செயலர் சு.முரளிதரன் சனசமூக நிலையங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் எனவும் எந்த திகதிகளில் இறுதி கட்டமாக முடித்து சமர்ப்பிக்க வேண்டும் எனவும் சனசமூக நிலய தலைவர் செயலாளர்களுக்கு விரிவாக விளக்கியுள்ளார்.(92)

## வவுனியா நகரசபையின் பாதீடு மக்கள் பார்வைக்கு

வவுனியா நகரசபையின் பாதீடு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாக நகர சபையின் செயலாளர் க. சத்தியசீலன் தெரிவித்தார்.

வவுனியா நகரசபையின் 2015ஆம் ஆண்டுக்கான பாதீடு எதிர்வரும் 16ஆம் திகதியிலிருந்து 20ஆம் திகதி வரை மக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் இப்பாதீடு தொடர்ப்பில் மக்களது கருத்துக்களையும் ஆட்சேபனைகளையும் தெரிவிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

# பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் கலைவிழா



சாவகச்சேரிநகர் புவேந்தன் பாலர்பகல்பராமரிப்பு நிலையத்தின் 20ஆவது ஆண்டு கலைவிழா நிலையத்தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில்நேற்று முன்தினம் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதிக் கல்விப்பணிப்பாளர் சிவத்திரை சிவநாதன் கலந்து கொண்டார்.

இதன்போது குறித்த முன்பள்ளியில் கல்வி கற்று ஆரம்பப் பாடசாலைகளுக்குச் செல்லவுள்ள 45 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டதுடன், பிரியாவிடை நிகழ்வும் ஆசிரியர் கௌரவிப்பும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அகில இலங்கை ரீதியாக இலங்கை வங்கி நடாத்திய அளவுப் பிரமாணங்களுக்குள் சித்திரம் வரைதல் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய செல்வன் ம.மதுசன், ஜெ.பவிவர்ணன் ஆகிய இரு மாணவர்களுக்கும் இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர்சேதுகாவலா சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

பிரதமவிருந்தினர் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவித்தார். (11)


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# ஈராக் இராணுவ ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்தியது ஐ.எஸ்.ஐ.எஸ்.



ஈராக் இராணுவத்துக்கு சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இதன்போது ஹெலிகொப்டரில் பயணித்த இரு விமானிகளும் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தையடுத்து, தரையிலிருந்து வான் இலக்குகளைத் தாக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் திறன ஈராக் பாதுகாப்பு அதிகாரிகளிடையே அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. தலைநகர் பாக்தாத்துக்கு 95 கி.மீ. தொலைவிலுள்ள, ஷியா பிரிவின ரின் புனித நகரான சமராவில் இந்தத் தாக்குதலை கடந்த வெள்ளிக்கிழமை தீவிரவாதிகள் மேற்கொண்டனர்.

இது குறித்து ஈராக் இராணுவ அதிகாரி ஒருவர் தகவல் தருகையில், இராணுவத்தின் இசி635 ரக ஹெலிகொப்டர் பறந்து கொண்டிருந்தபோது, தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

தோளில் வைத்து ஏவக்கூடிய சிறிய வகை ஏவுகணையைக் கொண்டு அந்த ஹெலிகொப்டரை தீவிரவாதிகள் தாக்கினர் என்றார்.



ஆப்கான் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஜேர்மன் பாதுகாப்புத்துறை அமைச்சர் உர்சுலாவோன்டெர் லியென் கல்லூரி மாணவிகளை சந்தித்து பேசினார்.

# பலி எண்ணிக்கை 18 ஆக அதிகரிப்பு

இந்தோனேசியாவில் மழை காரணமாக நேரிட்ட நிலச் சரிவில் சிக்கி 18 பேர் உயிரிழந்தனர். 110 பேரைக் காணவில்லை.நாட்டின் மத்திய பகுதியில் அமைந்துள்ள ஜெம்ப்லங் கிராமத்தில், தொடர் மழை காரணமாக வெள்ளிக்கிழமை இரவு நிலச் சரிவு ஏற்பட்டது.இதில் 105 வீடுகள் புதையுண்டன.


இராணுவ வீரர்கள், பொலிஸார் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான மீட்புக்குழுவினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 18 பேரது சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. மேலும் 110 பேரின் கதி என்னவாயிற்று என்பது தெரியவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நிலவுக்கு கடிதம் அனுப்பும் “மூன் மெயில்” சேவை அறிமுகம்

நிலவுக்கு தபால்களை அனுப்பும் 'மூன் மெயில்' என்ற சேவையை அமெரிக்க நிறுவனமான ஒஸ்ட்ரோபோடிக் அறிமுகப்படுத்தியுள்ளது.

பட்டமளிப்பு, திருமணம் மற்றும் பிறந்த நாள் என்று அன்புக்குரியவர்களுடனான நமது நினைவுகளை என்றும் பல நூற்றாண்டுகள் நிலவில் அழியாது காக்க முடியும் என்பதற்காக இந்த சேவை தொடங்கப்பட்டுள்ளது.

உலகின் எந்த மூலையிலுள்ள மக்களும் ஒஸ்ட்ரோபோடிக்கின் நிலவில் தரையிறங்க இருக்கும் விண்கலம் மூலம் தங்கள் நினைவு சின்னங்களை அனுப்பலாம் என அந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஜோன் தோர்ண்டன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அந்நிறுவனம் தனது இணையதளத்தில் வெளியிட்ட தகவலின் படி, தற்போது சிறிய அளவிலான நினைவு சின்னங்களை முதல் நிலவுப் பயணத்திற்காக சேகரிக்கத் தொடங்கியுள்ளோம்.



'மூன் கேப்சூல்' எனப்படும் நிலவில் நமது பொருளை பாதுகாக்க பெட்டகம் ஒன்று தரப்படும் என தகவல் வெளியிட்டுள்ளது.நாம் அனுப்ப நினைக்கும் பொருளின் எடைக்கேற்ப 460 டொலர் முதல் 26000 டொலர் வரை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# அரச பட்டத்தை துறந்தார் தாய்லாந்து இளவரசி

(பாங்கொக்)



தாய்லாந்து நாட்டில் அடுத்த ராணி பட்டத்துக்கு வர வேண்டிய இளவரசி ஸ்ரீராசம் நேற்று முன்தினம் தனது அரச பட்டத்தை துறந்தார். அவர்களது குடும்பத்துக்கு உள்ளேயே ஏற்பட்ட விரிசலால் அரச பதவியை துறந்தார் என்று அரண்மனை வட்டாரங்கள் கூறுகின்றன. தாய்லாந்து நாட்டின் மன்னராக 87 வயதான பூமிபால் அதுல்யாதேஜ் திகழ்ந்து வருகிறார். ஸ்ரீராசம் இளவரசியாக இருந்து வருகிறார்.

இந்நிலையில், ஸ்ரீராசம் குடும்பத்தை சேர்ந்தவர்கள் அரசு பணிகளில் பல்வேறு ஊழல்களை மேற்கொண்டு வருவதாக கடந்த 2 வாரத்துக்கு முன் இளவரசர் வஜிராலோங்காமிடம் குற்றச்சாட்டு எழுந்தது. அவற்றை விசாரிக்க மன்னர் அனுமதி அளித்தார். இதை தொடர்ந்து ஸ்ரீராசம் குடும்பத்தினர் மீதான ஊழல் குற்றச்சாட்டு குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தனது குடும்பத்தினரின் ஊழல் குற்றச்சாட்டுக்கு பொறுப்பேற்று இளவரசி பட்டத்தை துறப்பதாக நேற்று முன்தினம் மன்னர் பூமிபாலிடம் ஸ்ரீராசம் கூறினார். அவரது கோரிக்கையை மன்னரும் ஏற்றுக் கொண்டார். தாய்லாந்து நாட்டின் அடுத்த ராணி யாக பொறுப்பேற்க வேண்டிய இளவரசி தனது அரசு பட்டத்தை துறந்தது மக்களிடையே பெரும கவலையை ஏற்படுத்தியுள்ளது.




# பாலியல் குற்றங்களை தடுக்க ஆளில்லா உளவு விமானங்கள்

## டில்லி பொலிஸாரின் புதிய முயற்சி



இந்தியாவில் முதல் முறையாக, டில்லியில் தெருக்களை கண்காணிக்க ஆளில்லா உளவு விமானங்களை பொலிஸார் பயன்படுத்தவுள்ளனர். டில்லியில் அதிகரித்து வரும் பாலியல் குற்றங்களைத் தடுக்க எடுக்கப்படும் புதிய முயற்சி இது.

டில்லியில் தனியார் நிதி நிறுவனத்தில் பணியாற்றும் 27 வயது பெண், கடந்த வாரம் பாலியல் வன்கொடுமைக்கு ஆளர்ன சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஆள் நடமாட்டம் இல்லாத பகுதிகள், இத்தகைய குற்றங்களுக்கு சாதகமாக இருபதாக கருதப்படும் நிலையில், இப்பகுதிகளை ஆளில்லா உளவு விமானம் மூலம் கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வகை விமானங்கள் தற்போது எல்லையில் ஊடுருவல மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளை கண்காணிக்க பாதுகாப்பு படையினரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் சக்தி வாய்ந்த விளக்குகளை பொருத்துவதன் மூலம் டில்லியில் பாலியல் குற்றங்கள் உட்பட பல்வேறு குற்றச் செயல்களை தடுக்க முடியும் என மத்திய உள்துறை அமைச்சகம் கருதுகிறது.

# 4.479 கோடி கறுப்புப்பணம்




சுவிட்ஸர்லாந்தில் உள்ள ஹெச்.எஸ்.பி.சி வங்கியில் இந்தியர்களின் வங்கிக் கணக்குகளில் 4,479 கோடி ரூபா கறுப்புப் பணம் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்தியர்களின் கருப்புப் பணம் தொடர்பாக விசாரிக்க இந்திய அரசு அமைத்துள்ள சிறப்புப் புலனாய்வுக் குழு, உச்ச நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்த மனுவில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில், சுவிட்ஸர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் உள்ள ஹெச்.எஸ்.பி.சி வங்கிக் கிளையில் கணக்கு வைத்துள்ள 628 இந்தியர்களின் பட்டியல், பிரான்ஸ் அரசு மூலம் மத்திய அரசுக்குக் கிடைத்துள்ளது. அவர்களின் கணக்குகளில் 4,479 கோடிரூபா பணம் உள்ளது. அந்த வங்கிக் கிளையில் கணக்கு வைத்துள்ள 79 இந்தியர்கள் மீது வருமான வரித்துறை நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

இது தொடர்பான 46 வழக்குகளில் 1961ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்தின்கீழ் அபராதம் விதிக்கும் நடவடிக்கைகள் தொடஙகப்பட்டுள்ளன.

# கனடாவில் பரவுகிறது புளூநோய்

கனடாவில் கடந்த மூன்று வாரங்களாக தொடர்ந்து புளூ நோய் பயங்கரமாக பரவி வருகிறது.இதுகுறித்து கனடிய பொது சுகாதார நிறுவனம் கூறுகையில், டிசம்பர் மாதம் 6ஆம் திகதியுடன் முடிவடைந்த ஒருவார காலப் பகுதியில் ஒன்றாரியோ, பிரிட்டிஷ கொலம்பியா, அல்பேர்டா, குபெக் ஆகிய மாகாணங்களில் புதிதாக 37 பேருக்கு புளூ நோய பிடித்துள்ளது என்றும் இவர்களில் 32 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் சஸ்கட்சுவன் மற்றும் நோவா ஸ்கோஷியா மாகாணங்களிலும் தற்போது நோய் பரவுவருவதால் கனடிய மக்கள் பீதியில் உறைந்துள்ளதாக கூறப்படுகிறது.

# பின்லேடனை காட்டிக் கொடுத்த வைத்தியருக்கு கொலை மிரட்டல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அபோதாபாத்தில் மறைந்து வாழ்ந்த அல்கொய்தா தீவிரவாதிகள் தலைவர் பின்லேடனை காட்டிக்கொடுத்த பாகிஸ்தானை சேர்ந்த வைத்தியர் 'கில் அப்ரிடி (வயது-50)க்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவருக்கு பாகிஸ்தான் அரசு 35 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது.அமெரிக்கா வற்புறுத்தலின் பேரில் அவரது தண்டனை காலம் 23 ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது அவர் பெஷாவரில் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. அதுகுறித்த கடிதம் கைபர் பிக்துன்கவா மாகாண அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதில் மறைவாகவோ அல்லது வெளிப்படையாகவோ வைத்தியர் 'கில் அப்ரிடி கொல்லப்படுவார் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இந்த தகவலை கைபர் பக்துன்கவா மாகாண அதிகாரிகள், தெரிவித்துள்ளனர். அதை தொடர்ந்து வைத்தியர் ஷிகில் அப்ரிடிக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

# 30ஆவது கலாபூஷண அரச விருது 398 பேருக்கு வழங்கி கௌரவிப்பு



கலாசார திணைக்களத்தின் மூலம் வருடா வருடம் நடாத்தப்படும் 30 ஆவது கலாபூஷண அரச வீருது வழங்கும் விழா நேற்று கொழும்பு-7 பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களம், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து கலைத்துறைக்கு உன்னதமான சேவையாற்றிய கலைஞர்களைக் கௌரவிக்கும் நோக்கில் இந்த விழா வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகிறது.

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரி.பீ.ஏக்கநாயக்க தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இம்முறை சிங்கள கலைஞர்கள் 273 பேருக்கும், தமிழ் கலைஞர்கள் 100 பேருக்கும், முஸ்லிம் கலைஞர்கள் 28 பேருக்குமாக மொத்தம் 398 பேருக்கு கலாபூஷண விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வில் கலாசார அமைச்சின் செயலாளர் வசந்த ஏக்கநாயக்க, புத்த சாசன அமைச்சின் செயலாளர் எம்.கே.பி. திஸாநாயக்க, கலாசார அமைச்சின் பணிப்பாளர் விஜித் கனுகல, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஸமீல் உட்படப் பலர் கலந்து கொண்டு கலைஞர்களுக்கு சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் பொற்கிளிகளையும் வழங்கி வைத்தனர்.

இதன்போது பாடசாலை மாணவிகளின் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சளியடைப்பால் சிசு மரணம்

பிறந்து 55 நாட்களான பெண் குழந்தை ஒன்று சளியடைப்புக் காரணமாக சங்கானை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுதர்சன் பவதாரணி என்ற பெண் குழந்தையே இவ்வாறு மரணமடைந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு தாய் குழந்தைக்கு பாலூட்டிக் கொண்டிருந்ததாகவும், திடீரென குழந்தை சுகவீனமடைந்ததை அடுத்து சங்கானை வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற போது அங்கு குழந்தை மரணமடைந்துள்ளது.

எனவே குழந்தை மரணமடைந்ததன் காரணமறிய யாழ். போதனா வைத்தியசாலைக்கு குழந்தையின் சடலம் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அங்கு மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின் மூலம் குழந்தை சளி அடைப்புக் காரணமாகவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர் தெரிவித்துள்ளார். (பா)

## தபால் மூல....

தகுதி பெற்ற அரச ஊழியர்கள், முப்படை, பொலிஸார், சிறைச்சாலை அதிகாரிகள், இலங்கை போக்குவரத்து திணைக்களத்தில் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் ஊழியர்கள் மாத்திரமே தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிக்க முடியும்.

எனினும், இவற்றுடன் சம்பந்தப்படாத ஊழியர்கள் தபால் மூலம் வாக்களிப்ப தற்கான விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர் எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க சுமார் 5 இலட்சத்து 48 ஆயிரம் பேர் தகுதி பெற்றுள்ளனர்.

தபால் மூலம் வாக்களிக்கும் வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் இன்று முதல் விநியோகிக்கப்படும் எனவும் தேர்தல்கள் செயலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 23, 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

## அரசிலிருந்து...

செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் இந்தக் கருத்தை மறுத்து ள்[illegible]இரு வரும், வதந்திகளைப் பரப்ப வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

நேற்றுக் கண்டியில் நடைபெற்ற மக்கள் பிரதிநிதிகளின் கூட்டத்தில் கலந்து கொண்ட மு.கா. பிரதிநிதிகளான இவர்கள், மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மு.கா.யாருக்கு ஆதரவளிக்கும் என்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது. இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

மு.கா. தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், நேற்றைய கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போது, (நாளை) இன்று அரசின் முக்கியமான அமைச்சர்களுடன் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது. இந்தச் சந்திப்பின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் மு.கா.வின் நிலைப்பாடு ஆராயப்படும் என்று தெரிவித்துள்ளார். இந்த நிலையில் அமைச்சர்களை கட்சித் தலைவர் சந்தித்து கலந்துரையாடியதும், சில தினங்களில் மு.காவின் அரசியல் அதியுயர் மட்டத்தினர் கூடி ஆராய்வர். இதன்போது அமைச்சர்களுக்கும், கட்சித் தலைவருக்கும் இடையிலான பேச்சுக்களில் ஏற்பட்ட திருப்பங்கள் ஆராயப்பட்டு உயர்பீடம் ஒரு முடிவை எடுக்கும். இந்த முடிவு எடுக்கப்பட்ட பின்னர் கட்சித் தலைவர் ஹக்கீம், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு என்ற முடிவை சில தினங்களில் அறிவிப்பார்.

மகிந்த கூட்டணியில் இருந்து மு.கா. வெளியேறுவதாகவும், மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கும் என்றும் சில ஊடகங்களில் வெளியா[illegible] செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என அவர்கள் மேலும் தெரிவித்தனர்

இதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து நேற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொண்ட கலந்துரையாடலில் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை.

அந்தக்கட்சியின் தலைவர் மற்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கண்டியில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஒருதரப்பினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் மற்றைய தரப்பினர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் விருப்பம் தெரிவித்துள்ளதாக தெரிகிறது.

இதனால் எந்தவொரு இணக்கப்பாடும் இன்றி இந்தக் கலந்துரையாடல் முடிவுக்கு வந்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் தினங்களில் தாம் ஆதரவளிக்கப் போகும் வேட்பாளரை அறிவிப்பதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

## கிணற்றில்...

முதலே பாட்டன், பாட்டியுடன் வசித்த இச்சிறுவன் நேற்று முன்தினம் மாலை காணாமற்போய் இரவு வீடு திரும்பாத நிலையில் நேற்று அதிகாலை வீட்டுக் கிணற்றில் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளான்.

தண்ணீர் அள்ளச் சென்ற சமயமே இச்சிறுவன் தவறி வீழ்ந்துள்ளதாக விசாரணையின் போது தெரிவிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி பதில் நீதவான் செ.கணபதிப்பிள்ளை, சடலத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ)

## 33 பேர்....

கப்பட்டவர்களில் 33 பேர் சாட்சியமளித் தனர். சாட்சியமளிப்பதற்காக 52 பேருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதும் 33 பேரே சாட்சியமளித்தனர்.

இந்தச் சாட்சியங்களில் அதிகளவானவை இராணுவத் திற்கு எதிராகவே பதிவாகின. செட்டிகுளம், நேரியகுளம் பகுதியில் இருந்து 10 முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் சாட்சியமளித்தனர். இன்று நடை பெறவுள்ள விசாரணைக்கு 52 பேருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## தேர்தல் விஞ்ஞாப...

வவுனியா வன்னி இன் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

தமிழரசுக்கட்சியின் செயற்குழு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் இன்றைய அரசியல் நிலை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் ஏனைய விடயங்களையும் கலந்துரையாடி இருந்தோம்.

பல மாவட்டங்களிலும் இருந்து வந்த எமது உறுப்பி னர்களின் அபிப்பிராயங்கள் எம்மால் கோரப்பட்டு கருத்து ஆராயும் கூட்டமாக இடம்பெற்றிருந்தது.

இதன்போது அவர்களது கருத்துக்கள் ஒருமித்ததாக இருந்தது. ஆனால் அந்தக் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு ஒரு தீர்மானமாக எடுக்கவில்லை. எங்களுடைய இந்தக் கருத்துக்களை ஒருமித்து தமிழரசுக்கட்சியின் அரசியல் குழு ஆராய்ந்து பொருத்தமான சிபாரிசை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கு கொடுக்கும்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தான் உரிய நேரத்தில் ஆராய்ந்து தீர்மானத்தை எடுக்கும் .

இதன்போது ஜனாதிபதி வேட்பாளர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்துள்ளீர்களா எனக் கேட்டபோது, நாம் அவ்வாறான ஒப்பந்தங்களைச் செய்யவில்லை என்பதனைத் திட்ட வட்டமாகச் சொல்ல விரும்புகின்றேன் என தெரிவித்தார்.

இதன்போது மறைமுகமாக தமிழ்த் தேயக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றவர்கள் மைத்திரிபாலவுக்கு ஆதரவான கருத்துக்களைக் கூறுவது தொடர்பாக உங்கள் கருத்து என்ன என கேட்டபோது,

அவ்வாறு யாரும் பகிரங்கமாக மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க வேண்டும் என்று சொன்னதாக இல்லை. ஆனால் பொது மக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற கருத்தைத்தான் அவர்கள் வெளிப்படுத்தியதாக அறிகின்றோம்.

நேற்றைய கூட்டத்திலும் எல்லோரும் வாக்களிப்பதற்கு வற்புறுத்த வேண்டும் என்ற கருத்தும் தரப்பட்டுள்ளது. அது மட்டுமே தற்போதைக்கு உள்ள கருத்தாக இருக்கும்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தனின் இந்திய விஜயம் ஜனாதி பதித் தேர்தல் தொடர்பாக ஆராய்வதாக இருக்குமா எனக் கேட்டபோது, இது பரிதாபகரமான நிலை. அவர் ஏற்கனவே செய்து கொண்ட சத்திரசிகிச்சைக்காக வருடாந்தம் சிகிச்சை பெற மருத்துவர் கூறியதற்காகவே அவர் இந்தியா சென்றுள்ளார்.

மாறாக ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக டில்லி சென்று பேச வேண்டிய தேவை தற்போதைக்கு ஏற்படவில்லை. அவர் மிக விரைவாக வந்துவிடுவார் எனத் தெரிவித்தார்.

## புலிகள் மீதான...

புலிகள் இயக்கம் நீக்கப்பட்டது.

எனினும், ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றின் தீர்மானம் புலிகளுக்கு எதிரான பிரித்தானிய தடை உத்தரவில் மாற்றம் ஏற்படுத்தாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை நீக்கம் குறித்த தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்யும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்திற்கு பிரித்தானியா ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளூர் சட்டங்களின் அடிப்படையில் தடை தொடர்பான சட்டங்கள் அமுல்படுத்தப்படும் என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2000 ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை பிரித்தானியாவில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வாக்களிப்பு...

நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

இதன்போது யாழ்.தேர்தல் மாவட்டத்திலுள்ள வாக்களிப்பு பிரிவுகளுக்கான பிரசார முகவர்களாக றெமீடியஸ், சர்வானந்தா, கோபிகிருஸ்ணா, யோகராஜன், அகிலதாஸ் ஆகியோர் அமைச்சரிடம் நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டதோடு நடைபெறவிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து தேர்தல் பணிகளில் ஈடுபடுவதாக விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரச உதவிகள்...

நானும், எனது சகோதரி ஒருவரும் சிவராத்திரி பூசைக்காக எமது ஊரான வாரிக்குட்டியூரில் உள்ள கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தோம். இரவு வேளை நாம் சென்று கொண்டிருந்த போது வீதியில், அரைக் காற்சட்டையுடன் நின்ற நால்வர் எனது கணவரைப் பெயர் சொல்லி அழைத்துக் கூட்டிச்சென்றனர். அன்றிலிருந்து அவருக்கு என்ன ஆனது என்று எனக்குத் தெரியாது. கணவர் காணாமற்போவதற்கு முன்னரும், பின்னரும் எமது வீட்டை இராணுவத்தினர் தொடர்ச்சியாகக் கண்காணித்து வந்தனர். தந்திரிமலை இராணுவ முகாமைச் சேர்ந்த துசார என்ற பெயருடைய புலனாய்வாளரே எனது கணவர் பற்றியும், குடும்பம் பற்றியும் விசாரித்து வந்தார்.

எனது கணவர் காணாமற் போன சமயம் துசார என்ற அதிகாரியை நான் சந்திக்க முற்பட்ட வேளை அவர் என்னைச் சந்திக்கவில்லை.

கிராமிய அபிவிருத்திச் சங்கத்தில் இருந்த எனது கணவர் பொது வேலைகளை ஆர்வமாகச் செய்து வந்தவர். இதன் காரணமாக குறித்த இராணுவ முகாமைச் சேர்ந்தவர்களே எனது கணவரைக் கடத்திச் சென்றனர் என்று அந்த பெண் சாட்சியமளித்தார்.

இதன்போது, உங்களுக்கு அரச உதவிகள் கிடைத்தனவா, வீட்டுத்திட்டம் கிடைத்ததா? என்று ஆணைக்குழு அதிகாரிகள் கேட்டதற்கு, சமுர்த்தி உதவி கிடைக்கிறது. எனக்கு இந்த உதவிகளைப் பெற்றுத்தர எண்ணுவதைவிட கணவனை மீட்டுத் தாருங்கள் எனத் தெரிவித்தார்.

# ஐ.நா. அறிக்கையை எதிர்கொள்ள சட்டவல்லுநர்களுடன் தொடர்பு

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை குறித்த அறிக்கையை எதிர்கொள்வது குறித்து உலகிலுள்ள மிகப் பிரபலமான சட்டவல்லுநர்களுடன் தொடர்பு கொண்டுள்ளதாக வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் நடத்தி வரும் விசாரணையின் அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மிகவும் சிக்கலான இந்த அறிக்கையின் விளைவுகளை எதிர்கொள்வது குறித்தே, அரசாங்கம் உலகில் பிரபலமான சட்டவல்லுனர்களின் உதவியை நாடியிருக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் கொடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் அழுத்தங்களை எதிர்கொள்வது குறித்து பல் வேறு மட்டங்களிலும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உலகின் மிகச் சிறந்த சட்டவாளர்களுடன் நாம் தொடர்பு கொண்டுள்ளோம்.

சட்டமூலோபாய ரீதியான தயார்படுத்தல்களை மேற்கொள்வது தொடர்பாக அவர்கள் எம்முடன் இணைந்திருக்கின்றனர்.

ஆனால், இது முக்கியமானதொரு அரசியல் விவகாரம். எனவே, நாம் நட்பு நாடுகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாடு கடத்தப்பட்டார் இலங்கையரான சுலைமான்

தென்னிந்தியாவில் உள்ள அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய தூதரகங்களின் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக கூறப்படும் மலேசியாவில் வசித்த இலங்கையர் ஒருவரை தம்மிடம் கையளிக்குமாறு இந்தியா, விடுத்த கோரிக்கையை மலேசியா புறக்கணித்துள்ளது.

இந்தநிலையில் மலேசியா, குறித்த இலங்கையரை இலங்கைக்கு அண்மையில் நாடு கடத்தியது.

தமிழகத்தில், இந்தக் குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட சகீர் ஹுசைனிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, மலேசியாவில் வசித்து வரும் மொஹமட் ஹுசைன் மொஹமட் சுலைமானும் இதில் தொடர்பு கொண்டுள்ளமை தெரியவந்தது.

இதனையடுத்து அவரை தமது நாட்டுக்கு கடத்துமாறு இந்தியா, மலேசியாவிடம் பல் வேறு தடவைகள் கோரிக்கை விடுத்தது. இதற்காக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பல உடன்படிக்கைகளும் சுட்டிக்காட்டப்பட்டன.

எனினும் மலேசியா அதற்கு உடன்படாமல், குறித்த இலங்கையரை சொந்த நாட்டுக்கே அனுப்பியுள்ளது. கொலைக் குற்றச்சாட்டு ஒன்று தொடர்பிலேயே அவரை நாடு கடத்தியதாக மலேசியா காரணம் கூறியுள்ளது.

# மைத்திரிக்கு ஆதரவு ஏன்? விளக்குகிறார் சம்பிக்க

(கொழும்பு)

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தல் மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டுதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே ஜாதிக ஹெல உறுமய கட்சி ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி களின் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்கின்றது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பிரதான தமிழ் அரசியல் கட்சிகள் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும், ஜனாதிபதித் தேர்தலை இன சமூகமொன்றின் பிரச்சினைகளின் அடிப்படையில் கருத்திற் கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலானது தமிழ், சிங்கள அல்லது முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்வதா அல்லது நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டி நல்லாட்சியை ஏற்படுத்துவதா என்பதனை மக்களே தீர்மானிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

போலியான பிரசாரங்களைக் கண்டு மக்கள் ஏமாற்றமடைந்துவிடக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார். எதிர்கால சந்ததியினரை கருத்திற்கொண்டு மக்கள் தீர்மானம் எடுக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டினால், அரசியல் சாசனத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிணற்றில் தவறி வீழ்ந்த இளைஞர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)


கொக்குவில் நந்தாவில் பகுதியில் கிணற்றில் தவறி வீழ்ந்த இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கிணற்றுக்குள் வீழ்ந்த இளைஞர் அயலவர்களினால் தூக்கப்பட்ட போதும், அம்புலன்ஸ் வண்டியில் உரிய நேரத்தில் வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல முடியாமையே இளைஞர் உயிரிழக்கக் காரணமாக அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இளைஞனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு அவசர அம்புலன்ஸ் வண்டிக்குத் தகவல் கொடுக்கப்பட்ட போதும், அங்கிருந்து பல்வேறு கேள்விகள் கேட்டு தாமதப்படுத்தப்பட்டதாகவும், இதனால் பிறிதொரு அம்புலன்ஸ் வண்டியில் குறித்த இளைஞனை வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற போது அவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் நேற்று கோப்பாய் பொலிஸாரின் விசாரணை மற்றும் பிரேத பரிசோதனையைத் தொடர்ந்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பா)

# ஐந்து சந்தியில் வாள்வெட்டு



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஐந்துசந்திப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளதுடன், அப்பகுதியில் இருந்த கடை ஒன்றும் அடித்து நொருக்கப்பட்டுள்ளதுடன், ஒரு மோட்டார் சைக்கிளும், இரு துவிச்சக்கர வண்டிகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

இச்சம்பவம் தொர்பில் தெரியவருவதாவது,

நேற்று மாலை மோட்டார் சைக்கிளில் வந்தோரினால் ஐந்து சந்திப்பகுதியைச் சேர்ந்த றிசான் (வயது - 40), அசீஸ் (வயது - 55) ஆகிய இருவர் மீதும் வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவத்தையடுத்து அப்பகுதி இளைஞர்களுக்கும் மோட்டார் சைக்கிளில் வந்தோருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள கடை ஒன்றும் கலவரத்தில் ஈடுபட்டோரினால் அடித்து நொருக்கப்பட்டதுடன், ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் இரு துவிச்சக்கர வண்டி என்பன தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து யாழ்.பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அப்பகுதியில் நிறுத்தப்பட்டதுடன், யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (25,105)

# ஜனாதிபதி மகிந்தவிற்கே முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு

## என்கிறார் அமைச்சர் எஸ்.பி.

ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ், தனது ஆதரவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்குவதற்குத்தான் தீர்மானிக்கும் என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்க நாவலப்பிட்டியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் ஆதர்வு ஜனாதிபதிக்கேயாகும். ஹெல உறுமய கட்சியிலிருந்து மூவர் சென்றனர். மீண்டும் ஒருவர் திரும்பி வந்தார்.

ஜே.வி.பி.யும் ஒரு பக்கத்தால் ஆதரவை வழங்குவார்கள். த.தே.கூட்டமைப்பின் தீர்மானம் இதுவரையில் இல்லை. எதிர்க் கட்சி இம்முறை 25 இலட்சம் வாக்குகளினால் தோல்வியுறும் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# தேர்தல் பிரசாரத்திற்கு அரசவளம்; அதிகரித்துச் செல்லும் முறைப்பாடு

அரச அதிகாரிகள் மற்றும் அரச வளங்களை தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்துவது தொடர்பில் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில், 55 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக செயலகத்தின் முறைப்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது. கிடைத்துள்ள முறைப்பாடுகளில், அரச வளங்களை பயன்படுத்தியமை தொடர்பில் 10 முறைப்பாடுகளும், அரச அதிகாரிகளை அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியமை தொடர்பில் 17 முறைப்பாடுகளும் அடங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அரச அதிகாரிகளுக்கு முறையற்ற விதத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டமை மற்றும் பதவி உயர்வு வழங்கப்பட்டமை தொடர்பிலும் 27 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இதனிடையே, தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. இந்த முறைப்பாடுகளுக்கு அமைய 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

# மேலும் இருவர் தாவினர்

(கொழும்பு)

பதவி ஸ்ரீபுர பிரதேசசபையின் உபதலைவர் மற்றும் உறுப்பினர் ஒருவரும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளனர்.

நேற்று திருகோணமலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர்கள் இதனைக் கூறினர்.

பதவி ஸ்ரீபுர பிரதேசசபையின் உபதலைவர் மனேல் கருணாநாயக்க மற்றும் உறுப்பினர் எச்.பி.தர்மகீர்த்தி ஆகியோரே இவ்வாறு அரசாங்கத்தில் இருந்து விலகியுள்ளனர்.

# மரண அறிவித்தல்

## சிவானந்தன் செந்தூரன்



புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவானந்தன் செந்தூரன் (13.12.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவானந்தன் புஸ்பலதா தம்பதியினரின் அன்பு மகனும், சுவர்ணா, யசிகா, துவாரகா, பார்த்தீபன் ஆகியோரின் சகோதரனும், நந்தன், சசிகரன், பகீதரன் ஆகியோரின் மைத்துனரும், பவதாரணி, சந்தோஷ், சஞ்ஜை, தனுஜா, மிதுஜா, விதுஷனா, விஷாலினி, சஜீபன் ஆகியோரின் மாமனாருமாவார்.

லிங்கேஸ்வரன், சிவகுமார், காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார், சந்திரகுமார் ஆகியோரின் மருமகனும், சந்திரபாலன், தர்மபாலன், சிவசிறி, ராசாத்தி, சிறிகந்தராஜா, திதியலதா ஆகியோரின் பெறாமகனும், வல்லிநாயகி, தர்மலிங்கம், லீலாவதி, கிருஸ்ணபிள்ளை, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.12.2014 திங்கட்கிழமை (இன்று) அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பார்த்தீபன்
(சகோதரன்)

2 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 டிசம்பர் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.